பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 07 வியாழக்கிழமை 23.09.2021 கதிர் 322

**இனி இது ரகசியம் அல்ல!**

'குருடன் பொண்டாட்டிக்கு அடித்த கதை'என்பார்கள். இலக்கின்றிச் சுழற்றும் போது சில சமயங்களில் அடி சரியாக விழுந்து விடுவதுண்டு. எங்களின் ஊகங்களும் சில, பல சமயங்களில் இப்படிப் பலித்து விடுவதுண்டு.

நல்லூர் பிரதேச பக்கம்02

# உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாகவே பொறுப்புக்கூறல், சீர்படுத்தப்பட்ட நீதி

## ஐ.நா.உரையில் கோட்டா தெரிவிப்பு



நியூயோர்க், செப்ரெம்பர் 23

நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாகப் பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

– இவ்வாறு நேற்றிரவு ஐ.நா. சபையில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். ☞11

## கூட்டமைப்புடன் பேச மறுக்கும் கோட்டாபய புலம்பெயர் தமிழரை அழைப்பது வேடிக்கை

### சபையில் சுமந்திரன் எம்.பி. விளாசல்



இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச மறுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,நியூயோர்க்கில் இருந்து கொண்டு புலம்பெயர் தமிழர்களைப் பேச அழைப்பது வேடிக்கையானது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ☞12


## கோட்டாபய வருகையை எதிர்த்து நியூயோர்க் நகரில் ஆர்ப்பாட்டம்!




இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இனப்படுகொலையாளி எனத் தெரிவித்து அவரின் அமெரிக்க வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு நேற்று போராட்டம் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களே ☞12

## நற்சான்றுப் பத்திரத்தை கையளித்தார் மொறகொட



இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் மிலிந்த மொறகொட நேற்று தலைநகர் புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி ☞12

## நாகர்கோவில் மகா வித்தியாலய படுகொலையின் நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் மகா வித்தியாலய பாடசாலை மீது இலங்கை விமானப்படை மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 ☞12

## புலம்பெயர் அமைப்புகளைத் தடை செய்துவிட்டு பேச்சு மேசைக்கு அழைப்பது வெற்றுப் பேச்சே!

### ஜனாதிபதியின் ஐ.நா. உரைக்கு கஜேந்திரகுமார் பதிலடி



தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பல எண்ணிக்கையிலான புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் தடை செய்து விட்டு, தற்போது உள்ளகப் பொறிமுறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு ஐ.நாவில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுப்பது வெற்றுப் பேச்சே.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ☞12

## புத்தளத்தில் குடிசை வீடு எரிந்ததில் வயோதிபர் பலி

புத்தளம் வண்ணாத்திவில்லு சேரக்குலிய பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஓலைக் குடிசை ஒன்று தீப்பற்றியுள்ளது. குடிசைக்குள் இருந்த – சுகவீன முற்ற – வயோதிபர் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்திருக்கிறார்.

குடிசையில் இருந்த ☞12

## சுமந்திரன், அங்கஜனின் ஆசீர்வாதத்தோடு கவிழ்க்கப்பட்டது வல்வெட்டித்துறை ஆட்சி

### சிவாஜிலிங்கம் கடும் சீற்றம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஒருவர் துரோகத்துக்கு விலை போனதால் வல்வெட்டித்துறை நகர சபையின் ஆட்சி வீழ்த்தப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சுமந்திரன், ☞12

## நேற்று தொற்று 1,321

இலங்கையில் நேற்று 1,321 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ☞12

## 92 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 92 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் ☞12

## மன்னார் ஆயர் இல்ல அராஜகங்களை ஆணைக்குழு அமைத்து விசாரியுங்கள்

### மறவன்புலவு சச்சிதானந்தம் கர்தினாலிடம் வலியுறுத்து



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.22

போருக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் சைவர்களை இலக்கு வைத்து ஆயர் இல்லத்தினால் அராஜகங்கள் நடாத்தப்படுகின்றன எனக் குற்றச்சாட்டுத் தெரிவித்து, அவற்றை ☞12



**RADIANT DAWN**

A Sunday Supplement in English to Kalaikkathir

வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில்

**RADIANT DAWN**

A Sunday Supplement பக்கத்திற்கு தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், மறக்காமல் மாணவர்களின் முழுப் பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபையில் நடந்ததுதான் வல்வெட்டித்துறையிலும் ரெலோவுக்கு நடக்கப்போகின்றது என்று நேற்றுத் தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தேன். இன்றைய தேர்தலில் பிரபல கணக்காளரும், சுயேச்சைக்குழு இலக்கம் 4 இன் பிரதிநிதியுமான செல்வேந்திரா கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒரு சிலரின் ஆதரவுடன் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரிகின்றது என நேற்றே தெரிவித்திருந்தேன்.

அது, அப்படியே நடந்தேறியிருக்கின்றது.

கீழேயுள்ள அடிமட்டத் தொண்டர்களின் மன நிலையை அறிந்து கொள்ளாமல் மேலே இருக்கும் தலைவர்கள் கனவுலகில் சஞ்சரித்தபடி, எதேச்சாதிகாரமாக விடயங்களைத் திணித்தால் இப்படித்தானாகும்.

யாழ்.மாநாகர சபை விடயத்திலும் தமிழரசுத் தலைவர் மாவை அண்ட் கோவும் இந்தப் பாடத்தைத்தான் படித்தது. அப்போதும் நேரத்துடன் எச்சரித்தேன். மாவையின் எதேச்சாதிகாரத் திணிப்பு மணிவண்ணுக்கு வெற்றி வாய்ப்பைத் தேடிக் கொடுக்கப்போகின்றது என அப்பட்டமாகவே எச்சரித்தேன்.

மாவை சேனாதிராசா தரப்பு பொறுப்பின்றி நடந்து மேயர் பதவியைக் கோட்டைவிட்டு விட்டு, பின் முழிக்கின்றது. தான் திணித்த முடிவை உறுப்பினர்களின் விருப்பம் என்று பின்னர் சப்பைக் கட்டுக் கட்டினார் மாவை சேனாதிராசா.

ஜாடிக்கு ஏற்ற மூடி போல அவரை மாதிரியே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் கூட, யாழ்.மாநாகர சபையில் மாவை விட்ட அதே தவறை – களநிலைமையைக் கவனத்தில் எடுக்காமல் தங்கள் விருப்பை வல்வந்தமாக திணித்ததன் மூலம், நல்லூர் பிரதேச சபையையும், அதைத் தொடர்ந்து இப்போது வல்வெட்டித்துறை நகர சபையையும் பறிகொடுத்து நிற்கின்றார். இதுதான் நெடுந்தீவிலும் ரெலோவுக்கு நேர்ந்தது.

ஆனாலும் இத்தலைவர்கள் எல்லாம், இத்தகைய மோசமான பட்டறிவின் பின்னரும் கூட திருந்தவே மாட்டார்கள் என்பதுதான் அக்கட்சிகளின் துரதிஷ்டம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரகடனப்படுத்திய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஒரு விடயத்தைக் கூறினார். “ஒன்றில் நீங்கள் எங்கள் பக்கம். அப்படி இல்லாவிட்டால் நீங்கள் பயங்கரவாதிகள் பக்கம்” – என்று அறிவித்தார்.

அப்படித்தான் புலிகளும் பல சமயங்களில் நடந்து கொண்டனர். ஒன்றில் நீங்கள் எங்கள் பக்கம். இல்லையேல் துரோகிகள் பக்கம் என்றனர்.

அப்படிப்பட்ட ஒரு வியாக்கியானத்தைத்தான் நமது ‘பயர் பிரான்ட்’ அரசியல்வாதி சிவாஜிலிங்கம் இப்போது கூறுகின்றார் போலும்.

நேற்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு அவர் முன்னெடுத்த நகர்வுகள் தோற்றுப் போனதும் அவர் குழம்பி விட்டார் போலும். என்ன பேசுகின்றோம், ஏது பேசுகின்றோம் என்று விளங்காத மாதிரி – புரியாத மாதிரி – புசத்தியிருக்கின்றார் அவர்.

தன் பக்கம் நின்றவர்கள் எல்லாம் தேசியவாதிகளாம். எதிர்த் தரப்பில் நின்றவர்கள் எல்லாம் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களாம். அவர் பேச்சைக் கேட்டால் ஒரு பக்கம் சிரிப்பாகவும், மறுபக்கம் வெட்கமாகவும் இருக்கிறது.

இந்திய அமைதிப்படை தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த போது இந்தியத் தரப்புக்குப் பின்னால் கூசா தூக்கிய ரெலோவில் இருந்தவர் சிவாஜி. அப்போது புலிகளால் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான துரோகியாகப் பார்க்கப்பட்டவர். இந்தியப் படை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வட்வெட்டித்துறையில் புலிகளுக்கு ஆதரவான – ஆபத்தான – நிலைப்பாட்டைத் துணிச்சலுடன் எடுத்தவர் கணக்காளர் செல்வேந்திரா. அவரும், அவருடன் சேர்ந்த பிரமுகர்களும் வல்வெட்டித்துறையில் இருந்தபடி ஆற்றிய – மிகத் துணிச்சலான – நடவடிக்கைகள், நகர்வுகளைப் பத்திரிகையாளனாகப் பக்கத்தில் இருந்து பார்த்து நான் வியந்திருக்கிறேன். இந்தியப் படையின் கிடுக்குப் பிடிக்கும் மத்தியில் புலிகளின் மூத்த தலைவர்களை – நான் பெயர் குறிப்பிட்ட விரும்பவில்லை – நாங்கள் பத்திரிகைப் பிரதிநிதிகள் ஒளிவுமறைவாகச் சந்திக்கும் வீடுகளில் ஒன்று செல்வேந்திராவினுடையது.

அவர் தங்கள் கொள்கைக்கு மாறானவர் என்று சிவாஜி சொல்லலாம். ஆனால் தமிழ்த் தேசியத்துக்கு மாறானவர் என்று சொல்லும் தகுதி சிவாஜிலிங்கத்துக்கும் இல்லை என்பதுதான் என் திடமான கருத்து.

ரெலோவை விட்டுப் பிரிந்து தனிக் கட்சி அமைத்து ரெலோவைத் தாக்கிப் பேசியவர் சிவாஜி. விக்னேஸ்வரனின் கட்சி, சுரேஷின் கட்சி ஆகியவற்றுடன் கூட்டமைத்து கடந்த ஆண்டு பொதுத் தேர்தலைச் சந்தித்தவர்.

இப்போது கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டு, அதற்காக வழக்குப் போட்டமையினால் உறுப்பினர் பதவியைத் தக்க வைத்திருக்கும் சதீஷ் என்பவரை நகர சபைத் தலைவராக்க முயன்றது கூட்டமைப்பின் பங்காளிக் கடசியான ரெலோ.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சதீஷை விலக்க அனுமதி கொடுத்தது ரெலோ. அதனடிப்படையில் அவர் விலக்கப்பட்டார். விலக்கப்பட்டவரைக் கட்சியின் வேட்பாளராக நிறுத்த ‘செல்வம் அண்ட் கோ’ எடுத்த முடிவு மிகக் கீழ்த்தரமானது.

ரெலோவிலிருந்து விலகி புதுக்கட்சி அமைத்த சிவாஜியும் அதே சதீஷை நகர சபைத் தலைவராக்க முயன்றது.

பிரிந்த ரெலோவும் சிவாஜியும் இப்படிப் பொருத்தமற்றவரை நகர சபைத் தலைவராக்க ‘கூட்டு களவாணிகள்’ இணைந்த மாதிரி ஒன்றிணைந்தனர்.

அதற்கு ஒத்துவராத அனைவரும் இப்போது தேசியத்துக்கு விரோதிகள் என சிவாஜி கூப்பாடு போடுகின்றார்.

அது மாத்திரமல்ல, கடந்த பொதுத் தேர்தலில் விக்கி – சுரேஷ் அணியுடன் சேர்ந்து சிவாஜி போட்டியிட்ட போது அந்த வேட்பாளர் அணியில் செல்வேந்திரா தேசியப் பட்டியல் உறுப்பினர். நீதியரசர் விக்கியின் வேட்பாளர்.

இப்போதும் விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தா கூட்டணியில் தான் சிவாஜிலிங்கம் இருக்கின்றார்.

ஆனால், வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர் தெரிவில், அந்தத் தரப்பை எதிர்த்து ரெலோவுடன் கள்ளக் காதல் வைத்திருக்கின்றார்.

கள்ளக் காதல் தோற்றுப்போனதால் என்ன பேசுவது என்று தெரியாமல் புலம்புகின்றார்.

விக்கியின் ஆதரவு அணியும் சுரேஷின் தரப்பும் தேசியத்துக்கு எதிரான பக்கத்தில் நிற்கின்றன என்கின்றார் சிவாஜி. அப்படி என்றால் சிவாஜி இப்போது எந்தப் பக்கத்தில் நிற்கின்றார்?

அவர் கூறும் உண்மைத் தேசியம் ரெலோ பக்கத்திலோ அல்லது கூட்டமைப்புப் பக்கத்திலோ உள்ளது என்று அவர் கூறுகின்றாரா?

எனக்கு விளங்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் புரிகின்றது. சிவாஜியர் தானும் குழம்பி, மற்றையவர்களையும் குழப்ப முயல்கின்றார் என்பதுதான் அது...!

நேற்று நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எம்.பிக்களின் கூட்டம் சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. விவரத்தை நாளை பார்ப்போம்.

– மின்னல் –

# மரண அறிவித்தல்



## அமரர் நடராஜா சுந்தரம்

(ALURA (Pvt) Ltd. கம்பனியின் நிறுவுனர்)

**பிறப்பு:-08.02.1958**
**இறப்பு:- 16.09.2021**

கரவட்டியை பிறப்பிடமாகவும், நெதர்லாந்தினை வதிவிடமாகவும், கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சுந்தரம் (ALURA (Pvt) Ltd. கம்பனியின் நிறுவுனர்) கடந்த வியாழக்கிழமை (16.09.2021) அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று ALURA (Pvt) Ltd. பண்ணையில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-நண்பர்கள்**

Study in UK

- Minimum Requirement : GCE O/L (London or Local)
- IELTS minimum 4.0 average preferred
- Can apply without IELTS too
- Foundation / Diploma / Bachelors / Masters Programs
- Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
- Choice of Many Universities – Inner and Outer London
- Part time work during term time / Full time work during holidays.

SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road,
Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

காலைக்கதிர் Kalaikkathir

# தாய்நிலம்; காணி அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று

## தமிழ் மக்கள் பார்க்கவேண்டிய ஆவண படம் சனிக்கிழமை

தாய்நிலம்: நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று ( ThaaiNilam: Land Grabbing - The Real Pandemic for the Tamils in Sri Lanka) என்ற ஆவணப் படத்தின் திரையிடல் நிகழ்வுக்கு உங்கள் அனைவரையும் அழைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியரசரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன்.

இந்த ஆவண படம் தொடர்பில் அவர் வழங்கியுள்ள ஊடக அறிக்கை வருமாறு-

இந்த ஆவண படம் நீங்கள் முன்னர் ஒருபோதும் பார்த்திராத பல காட்சிகளையும், செவ்விகளையும் கொண்டிருக்கின்றது. இவை அனைத்தும் இலங்கையில் தமிழ்தாயகத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து நேரடியாகப் பதிவு செய்யப்பட்டவை ஆகும்.

இந்த ஆவண பட திரையிடல் நிகழ்வை தொடர்ந்து இலங்கையின் இனஞ் சார்ந்த நில ஆக்கிரமிப்பு: முறைகள், விளைவுகள் மற்றும் தமிழ் நில பாதுகாப்பு ( Sri Lanka's Ethnocratic Land Grabs: Methods, Consequences, and Tamil Land Defence ) என்ற இணையவழி கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இந்த முக்கியமான ஆவண படத்தின் முதன்மை காட்சி வெளியீடு Zoom, Youtube ஊடாக செப்ரெம்பர் 25 ஆம் திகதி 2021 சனிக்கிழமை மாலை ஐந்து ரைமணிக்கும் ( யாழ்ப்பாணம் - திருகோணமலை), லண்டன் நேரம் பிற்பகல் 1.00 மணிக்கும், டொரன்ரோ மற்றும் நியுஜேர்சி நேரம் காலை 8 மணிக்கும் ஆரம்பமாகி நான்கு மணித்தியாலங்களுக்கு இடம்பெறும்.

Zoom Link:
https://bit.ly/LandGrab2021
Webinar ID: 841 5154 5684
Passcode: TH2021

இலங்கை தீவில் தமிழ் மக்களின் தாயகமான வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கத்துடனும், எமது வாழ் வாதாரம், இருப்பு மற்றும் அடையாளம் ஆகியவற்றை இல்லாமல் செய்யும் நோக்கத்துடனும் இலங்கை அரசாங்கங்களால் கடந்த 70 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த இனவாத அடிப்படையிலான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தற்போது மிகவும் தீவிரம் அடைந்துள்ளன.

எமது நிலங்களைப் பாதுகாப்பதற்கும் இழந்த நிலங்களை மீட்பதற்கும் இயலாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்களின் நிலைமை மிகவும் ஆபத்தான தாகவும் கடினமானதாகவும் மாறியிருக்கின்றது. நிலத்துடன், நாம் எமது வாழ்வையும், 3,000 வருடங்களுக்கு மேற்பட்ட எமது அடையாளத்தையும் மிகவும் வேகமாக நாம் இழந்துவருகின்றோம்.

ஆகவே, எமக்கு இருக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்கள், வளங்கள், பலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்த நில அபகரிப்புக்கு எதிராக போராடவேண்டியமிகவும் இக்கட்டானஒருசூழ்நிலையில் நாம் நின்றுகொண்டிருக்கின்றோம்.

உலகம் முழுவதிலும் அடக்கு முறைகள், அநீதி மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர்கள் இந்த நில ஆக்கிரமிப்பை இலங்கை அரசாங்கம் நிறுத்துமாறும் எங்களிடம் களவாடப்பட்ட நிலத்தை மீள ஒப்படைக்குமாறும் குரல் எழுப்ப வேண்டும்.

இந்த பின்னணியில் நான் இந்த நிலஆக்கிரமிப்பு தொடர்பான ஆவண படதிரையிடல் மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்விமான்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன். இலங்கை அரசாங்கம் எங்களுக்கு எதிராக முன்னெடுக்கும் இந்த கொடூரமானநிலஆக்கிரமிப்புதொடர்பாக தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இதனை முன்னெடுக்கின்றேன்.

இந்த நிகழ்வை முதுபெரும் அரசியல் வாதியும், எனது பெரு மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், என்னை அரசியலுக்கு கொண்டு வந்தவருமானஆர். சம்பந்தன் என்னுடன் கூட்டாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார்.

தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு -கிழக்கில் கடந்த 70 வருடங்களாகத் தொடர்ச்சியாக சிங்கள அரசாங்கங்கள் முன்னெடுத்துவரும் நில அபகரிப்பு பற்றிய நேரடியான காட்சிகளும், அவை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் சர்வதேச புலமையாளர்கள், ஆய்வாளர்கள், இலங்கையின் முன்னாள் காணி ஆணையாளர்கள், அரசியல்வாதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் கருத்துக்களும் இந்த ஆவண படத்தில் இடம்பெறுகின்றன.

இந்த ஆவண படத்தை தமிழ் மக்கள் அனைவரும் அவசியம் பார்க்கவேண்டும். அதேவேளை, குழு இந்த விவாதத்தில் இந்தியாவில் 30 வருடங்களுக்கு மேலாக மக்களின் நில உரிமைகளுக்காகப் போராடும் பிரபல்யம் மிக்க செயற்பாட்டாளரான கலாநிதி மேதா பட்கார் அம்மையார், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் ராமு மணிவண்ணன், அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டால் ஆகியோர் இந்த குழு விவாதத்தில் கலந்துகொள்கின்றனர்.

இந்த குழு விவாதத்தை தொடர்ந்து ஈழத்தைபூர்வீகமாககொண்டகனடாவின் புகழ்பெற்ற இசைக் கலைஞரான ஷான் வின்சென்ட் டி போலின் இசை நிகழ்வு ஒன்று 20 நிமிடங்களுக்கு இடம்பெறும்.

ஆவண படம் திரையிட்ட பின்னர், அந்த படம் தொடர்பிலான ஆய்வு ரீதியான கலந்துரையாடல் ஒன்றில் இளையோர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் பிரித்தானியா, தமிழ் நாடு, அமெரிக்கா , ஐரோப்பா ஆகிய இடங்களில் இருந்து இளையோர்கள் கலந்துகொள்வர்.

எதிர்வரும் சனிக்கிழமை இந்த நிகழ்வுக்கு உங்களின் நேரத்தை தயவுசெய்து ஒதுக்கிவைத்து கலந்துகொள்ள தவறாதீர்கள்.

நிகழ்வில் பேராசிரியர் ஓரன் யிப்டசெல் (இஸ்ரேலின் சேவா பென்குரியன் பல்கலைகழகம்) பிரதம உரையை வழங்குவார்.

கலாநிதி மேதா பட்கர் (இந்தியாவின் சமூக செயற்பாட்டாளர்), நர்மதா பச்சோவ் அந்தோலன் (மக்கள் இயக்கங்களின் தேசிய கூட்டணியின் நிறுவுநர்), அனுராதா மிட்டல் (அமெரிக்காவின் கலிபோர்னியாவை சேர்ந்த ஒக்லன்ட் நிறுவகத்தின் நிர்வாக இயக்குநர்), பேராசிரியர் இராமு மணிவண்ணன் (சென்னை பல்கலைகழகம்-அரசியல்-பொதுநிர்வாகம் - சர்வதேச கற்கைகள் மற்றும் அரசியல் கல்லூரி) ஆகியோர் கலந்துரையாடலில் கலந்துகொள்வார்கள்.

கனடாவை சேர்ந்த தமிழ் கலைஞர் ஷான் வின்சென்ட் டி போலின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். - என்றுள்ளது.

## தியாகி திலீபன் நினைவு நிகழ்வு ஆஸ்திரேலியாவில் இணைய வழி




தன்னுடலை வருத்தி நீர்கூட அருந்தாது, தன்னுயிரை ஈகம் செய்த தியாகி திலீபனின் 34 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு, தற்போதைய கொரோனா வைரஸ் இடர்கால நிலையை கருத்திற்கொண்டு, செப்ரெம்பர் மாதம் 26 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இணையவழி ஊடாகவும் அடேலயிட் பிரிஸ்பன் பேர்த் ஆகிய இடங்களில் மண்டப நிகழ்வாகவும் நடைபெறவுள்ளது.

ஆயுதந்தரித்து களமாடிய விடுதலைப் போராளியான திலீபன், காந்தி தேசத்திடம் தமிழீழ மக்களுக்காக நீதிகோரி சாத்வீக வழியில் போராடினான். தமிழ் மக்களின் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, திலீபன் மேற்கொண்ட பயணம் எமது விடுதலைப் போராட்டத்தில் உன்னதமான அர்ப்பணிப்பாகியது.

பன்னிருநாள்கள் தன்னை உருக்கி உருக்கி எரிந்தணைந்த அந்தத் தியாக தீபத்தின் நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Zoom: https://us02web.zoom.us/j/81822186413?pwd=dVFHdVdZQjkrZzg2dzgvS zN5ZW5QQT09 OR https://bit.ly/2XpGEMz

Time: 26-09-2021 Sunday 6pm (Canberra, Sydney, Melbourne)

Contact: 0401 842 780, 0433 002 619

EVENT Youtube Advertisement Link: Thiyagi Thileepan Australian memorial/

தியாகி திலீபன் ஆஸ்திரேலிய நினைவேந்தல் நிகழ்வுகள்:https://www.youtube.com/watch?v=80sD_NGplOE

## கொவிட் இறுதிச்சடங்கு நடத்தமுடியாதவர்களுக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் உதவிகள்

கொவிட் - 19 காரணமாக காரணமாக இறப்பவர்களுக்கு தியாகி அறக்கொடை நிதிய தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் வலய ரீதியாக உதவிகளை மேற்கொண்டு வருகின்றார்.

யாழ்.மாவட்டத்தில் கொவிட் - 19 காரணமாக இறக்கும் வறியவர்களுக்கு யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆகிய மூன்று வலய ரீதியாக உடலங்களை கொண்டு செல்வதற்கான பிரேதப்பெட்டிகள் இதுவரை 30 இற்கும் மேற்பட்டவை வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் உடலங்களை கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து செலவு மற்றும் தகனக் கியைகளுக்கான செலவுகளையும் தியாகி வா. தியோகேந்திரன் தனது சொந்த நிதியில் தொடர்ச்சியாகவலயரீதியாக மேற்கொண்டு வருகிறார் என அந்த நிறுவனத்தின்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் அறிவித்துள்ளார். எனவே கொவிட்-19 காரணமாக இறக்கும் வறியவர்களின் நலன் பேண தியாகி வா. தியாகேந்திரன் நிறுவனம் உதவியில் உதவி எனும் பெருந்திட்டத்தில் கைகொடுத்து உதவி வருவதை பல பொது அமைப்புக்கள். வைத்தியசாலை நிர்வாகங்கள் மற்றும் கல்விமான்கள் எனப் பலர் பாராட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பால்மா, கோதுமைமா மற்றும் சிமெண்ட் விலை குறித்து விரைவில் இறுதி முடிவு

### லசந்த அழகியவன்ன கூறுகிறார்



எதிர்வரும் நாள்களில் பால்மா, கோதுமை மா மற்றும் சிமெந்து விலை தொடர்பான இறுதி முடிவு எட்டப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

விலை உயர்வை அனுமதித்தால் எந்தப் பற்றாக்குறையும் இல்லாமல் பொருள்களை வழங்க முடியுமா என்பது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடியதாகவும் அமைச்சர் கூறினார். உலக சந்தையில் விலை உயர்வு காரணமாக, பால்மா, கோதுமை மா மற்றும் சிமெந்து நிறுவனங்கள் பலமுறை விலை உயர்வை கோரியுள்ளன என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன கூறினார்.

இந்நிலையில் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு விலை உயர்வு கோருவதைத் தவிர்க்கவும், குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு போதுமான பங்குகளை இறக்குமதி செய்யவும் நிறுவனங்களை கேட்டுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தெரிவுக்குழுவுக்குத் தெரிவு

தேர்தல் சீர்திருத்தங்களை ஆராய்ந்து பரிந்துரைப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு மேலும் இருவரை இணைக்க ஆளும் தரப்பு ஏற்பாடு செய்திருக்கின்றது.

எதிரணியில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமும், அரசுத் தரப்புக்குள் புதிய எம்.பியாக உள்நுழைந்திருக்கும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இந்தத் தெரிவுக் குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பதினைந்து உறுப்பினர்களாக இருந்த இந்த தெரிவுக்குழுவின் அங்கத்தவர் எண்ணிக்கை இப்போது பதினேழாக உயர்ந்துள்ளது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்ட போது வழமைக்கு மாறாக அதிக இடங்களை அரசுத் தரப்பு சுவீகரித்துக் கொண்டது. வழமையாக இத்தகைய நாடாளுமன்றக் குழுக்களில் அரசுத் தரப்புக்கு அறுபது வீதமும், எதிரணிக்கு நாற்பது வீதமும் இடங்கள் வழங்கப்படுவது தான் முறைமை. அதன்படி பார்த்தால் அரசுத் தரப்புக்கு ஒன்பது இடங்களும் எதிரணிக்கு ஆறு இடங்களும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், மாறாக அரசுத் தரப்பு பத்து இடங்களை எடுத்துக்கொண்டு எதிரணிக்கு ஐந்து இடங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தது.

ஆளும் தரப்பில் ஒன்றைக் குறைத்து எதிரணிக்கு மேலதிகமாக ஓரிடத்தை வழங்குமாறு எதிரணித் தரப்பில் மன்றாட்டமாகக் கோரப்பட்டது. ஆனால் அரசுத் தரப்பு மறுத்து விட்டது.

அதனால், எதிரணித் தரப்பில் வழங்கப்பட்ட ஐந்து இடங்களில் ஒன்றை ஜே.வி.பிக்கும், ஒன்றைத் தமிழ்க் கூட்டமைப்புக்கும் வழங்கிய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மிகுதி மூன்றையும் தான் எடுத்துக் கொண்டது.

அந்த மூன்றில் ஒன்று கட்சியின் செயலாளரான ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும், மற்றைய இரண்டும் அக்கட்சியின் முஸ்லிம் பிரதிநிதியான கபீர் காசீமுக்கும் மற்றும் மனோ கணேசனுக்கும் வழங்கப்பட்டன. இப்படி அக்கட்சி சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குத் தமது மூன்று இடங்களையும் பிரித்து வழங்கி விட்டமையால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கு இந்தத் தெரிவுக் குழுவில் இடம் கிடைக்கவில்லை.

தேர்தல் சீர்திருத்தத்தில் சிறுபான்மையினர் பாதிக்கப்படக் கூடாது என்பது வலியுறுத்தப்படுவதால் இந்தத் தெரிவுக்குழுவில் சிறுபான்மையினரின் நலனை உறுதிப்படுத்தும் தரப்புகள் அவசியம் என்று வலியுறுத்தப்படுகின்றது.

சிறுபான்மையினர் தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், எம்.ஏ.சுமந்திரன், நீதி அமைச்சர் அலி சப்ரி, கபீர் காசீம் போன்றோர் இடம்பெற்றிருந்த போதிலும் முஸ்லிம்கள் தரப்பில் ரவூப் ஹக்கீமும் இடம்பெறுவது அவசியம் என்று பல தரப்புகளினாலும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

இப்போது நாடாளுமன்றத்துக்குள் புதிதாக வந்திருக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை இந்தத் தெரிவுக்குழுவுக்குள் உள்வாங்கும் திட்டத்தின் கட்டாயம் கருதி, அந்தப் பெயரில் ரவூப் ஹக்கீமுக்கும் அதற்குள் இடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரையில் சிறுபான்மைத் தரப்பின் கருத்துக்களை வலியுறுத்திப் பேணுவதில் ஹக்கீம் காத்திரமாகப் பங்காற்றுவார் என எதிர்பார்க்க முடியும்.

அந்த விடயத்தில் சுமந்திரன், மனோ கணேசன், ஹக்கீம் போன்றோர் ஒன்றுபட்டு இயங்க முடியும் என்பதும் சாதகமான அம்சம்தான்.

# யாழ். பல்கலைக்கழகப் பொதுபட்டமளிப்பு ஒக்.7 நிகழ்நிலையில் நடத்த மாணவர்களும் இணக்கம்



யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி நிகழ்நிலைவாயிலாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் இதனைத் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழாத் தொடர்பில் தீர்மனங்களை இயற்றுவதற்காக நேற்று (புதன்கிழமை) நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக்குழுவின் விசேட கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு விவரிக்கும் போதே கலாநிதி கே. சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார். இந்த விவரிப்பின் போது பல்கலைக்கழப் பதிவாளர் வி. காண்டீபன், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ் உமேஸ் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம், 08 ஆம், 09 ஆந் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்றும், நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் அதனை ஒக்ரோபர் 07 ஆம் திகதி நிகழ்நிலையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை. இதனால் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி மாணவர்களுக்கான பட்டங்கள் உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

நிகழ்நிலைப் பட்டமளிப்புக்குத் தாங்கள் இணங்கவில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதனையடுத்து துணைவேந்தரின் வேண்டுகோளுக்கமைய மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி, பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டம் நேற்று கூட்டப்பட்டது.

கூட்டத்தின் முடிவில், எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதி செய்வதென்றும், தற்போதைய நிலைமைகள் சீரடைந்ததும் மரபு ரீதியான பட்டமளிப்பு வைபவத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நடத்துவதற்கான திகதியை முன்மொழிவதற்கென மாணவர் பிரதிநிதிகளையும், பல்கலைக்கழக அலுவலர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழுவால் முன்மொழியப்படும் திகதிகளில் பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கென சுகாதார சேவைகள் திணைக்கள அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இதே குழு மேற்கொள்ளவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தடுப்பூசி பெற்ற கர்ப்பிணிகளிடமிருந்து எவ்வித முறைப்பாடும் பதிவாகவில்லை

## குடும்ப சுகாதாரப் பணியகம் அறிவிப்பு

இலங்கையில் இதுவரை கொவிட் - 19 தடுப்பூசிகளைப் பெற்ற சுமார் ஒரு லட்சம் கர்ப்பிணித் தாய்மார்களிடம் இருந்து எந்தவித சிக்கல்களையும் பதிவு செய்யவில்லை என்று குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனவே, அனைத்து கர்ப்பிணிப் பெண்களும் உடனடியாக கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

தடுப்பூசி பெற்ற அனைத்து தாய்மார்களின் தரவுத்தளத்தை நாங்கள் பராமரிக்கிறோம். அந்த தரவுகளின்படி தடுப்பூசியை பெற்றுக் கொண்ட தாய்மார்களில் எவரும் இதுவரை சிக்கல்களுக்கு உள்ளாகவில்லை.

தடுப்பூசி செலுத்தப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிறந்த குழந்தைகளையும் பரிசோதித்துள்ளோம், அந்தப் பரிசோதனைகளிலும் குழந்தைகள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தடுப்பூசித் திட்டத்தின் நோக்கம் சிக்கல்களைக் குறைப்பதும் தாய்மார்களிடையே இறப்பைக் குறைப்பதும் ஆகும். நீங்கள் இன்னும் தடுப்பூசிகளைப் பெறவில்லை என்றால், உங்கள் உள்ளூர் குடும்ப சுகாதார அதிகாரியைத் தொடர்புகொண்டு விரைவில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் குடும்ப சுகாதாரப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

# மரக்கறி லொறி கோரவிபத்து; ஆபத்தான நிலையில் சாரதி



மரக்கறி ஏற்றிச்சென்ற டிப்பர் லொறியொன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதி படுகாயமடைந்த நிலையில், பதுளை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை - வெல்லாவாயா பிரதான வீதியின் எல்ல என்ற பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பண்டாரவளையிலிருந்து மரக்கறி வகைகளுடன் சென்ற டிப்பர் லொறி, சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் டிப்பர் லொறியின் உதவியாளர் பாய்ந்து தப்பியுள்ளார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுவரும் சாரதியின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 84

ந.வித்தியாதரன்

பெயர் வைப்பதில் – பட்டம் சூட்டுவதில் – நாங்கள் வலு சூரர்கள். பாடசாலை நாள்களில் அதிபர், ஆசிரியர்கள், சக நண்பர்களுக்குப் பொருத்தமான பட்டம் சூட்டி, அவற்றை நிரந்தரமாக நிலை


ஆழிக்குமரனைப் பாராட்டிப் பேசும் தந்தை செல்வா.

நிறுத்திய எனது அனுபவம் நீண்டது. அது குறித்து சுவாரசியமாக நகைச்சுவைத் தகவல்களுடன் காலம் கிடைக்கும்போது ஒரு கட்டுரைத் தொடரை எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டு. இத்தொடர் அதற்குப் பொருத்தமானதன்று. அதனால் விட்டுவிடுகிறேன்.

இப்போதும் கூட யாழ்ப்பாணத்தில் ‘அமுல் பேபி’ என்றால் யார் என்பது மக்களுக்கு தெரியும். பெயர் சூட்டுபவரின் சிறப்பு அது.

1990 – 95 காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது இலங்கை விமானப் படையின் பல்வேறு விமானங்கள் வந்து மக்கள் குடியிருப்பு மீது – எதிரிகளின் பிரதேசம் போலக் கருதி – குண்டுகளை வீசிச் செல்வது வழமை.

அவ்ரோக்கள், சியாமாசெட்டி விமானங்கள், புக்காராக்கள், மிக் விமானங்கள், அன்ரனோவ்கள், வை – 8 ரக சரக்கு விமானங்கள் என்று அந்த விமானங்களின் பெயர் பட்டியல் நீண்டது. ஒவ்வொரு நாளும் ஒன்றோ அல்லது பல ரக விமானங்களோ திருகுதாளம் நடத்தும். அவையே பெரும்பாலும் பல நாள்களிலும் எமது முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக இருக்கும். இந்த விமானங்களில் இராணுவ சரக்குக் காவி விமானமான வை – 8 ரகத்தைச் சேர்ந்த சீனத் தயாரிப்பான விமானமும் ஒன்று. வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட பரல்களுடன் இந்த விமானம் வரும். அதன் பின் பகுதி கதவுகள் திறக்க, அதிலிருந்து இந்த பரல்கள் உருட்டி விடப்படும். தொலைவிலிருந்து பார்த்தால், மிக உயரத்தில் இருந்து உருட்டி விடப்படும் இந்த பரல்கள் விமானத்தின் திசையில் வந்த வேகத்தில் பறந்து சுமார் 2 அல்லது 3 நிமிடங்களில் ‘உஸ்’ என்ற பெரிய சத்தத்துடன் காற்றைக் கிழித்துக் கொண்டு வந்து விழுந்து வெடித்து, வெடிக்கும் பிரதேசத்தையே தீச்சுவாலையாக்கிப் பேரழிவை தரும்.

சில காலங்களில் நள்ளிரவில் அடிக்கடி இந்த விமானம் வரத்தொடங்கியது. அடுத்தடுத்து மூன்று, நான்கு நிமிட இடைவெளியில் நான்கு, ஐந்து வெடிகுண்டு பரல்களை அது உருட்டிவிட்டுச் செல்லும். இருட்டில் அது எங்கு வருகின்றது, எங்கு பரலை உருட்டிவிட்டுச் செல்கின்றது, எங்கே அது வெடிக்கப் போகின்றது என்பவை தெரியாது. எனினும் அந்த பரல்கள் காற்றை கிழித்துக் கொண்டு வரும் உஸ் என்ற சத்தத்தை மட் டும் கேட்க முடியும். அந்தக் குண்டு நீங்கள் இருக்கும் இடத்தை நோக்கி நெருங்கி வருகின்றதா அல்லது விலகிச் செல்கின்றதா என்பது கூட அது வெடித்த பின்னர் தான் தெரியும் புரியும்.

அது வரை நெஞ்சம் பதைபதைக்க, மரண அவஸ்தைதான். இந்த விமானச் சத்தம் கேட்டதுமே மக்கள் எல்லோரும் போட்டது போட்டபடி விட்டு விட்டு, தத்தமது வீடுகள், அலுவலகங்கள் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் பதுங்கு குழிகளுக்குள் பதறி அடித்துக் கொண்டு போய்ப் பதுங்கிக் கொள்வர். உதயன் அலுவலகத்தில் நான் நள்ளிரவில் இப்படிப் பதுங்குகுழிக்குள் பதுங்கி இருந்த சமயம் ‘உஸ்’ என்று காற்றை கிழித்துக்கொண்டு வந்த அந்த பரல் குண்டு ஒன்று எங்கள் பதுங்கு குழிக்குப் பக்கத்தில் ‘டோம்’ என்று பெரிய சத்தத்துடன் நிலத்தில் மோதியது. ஆனால் டெட்டனேட்டர் தவறால் அதிர்ஷ்டவசமாக அது வெடிக்கவில்லை.! நாங்கள் தப்பித்தோம், பிழைத்தோம். அந்தக் கணத்தில் பதுங்கு குழிக்குள் இருந்த நானும் எனது இரவு நேர சக ஊழியர்


18 வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த ஆழிக்குமரன்.

களும் பட்ட மரண அவஸ்தை, பீதி எழுத்தில் வடிக்க முடியாதது. (அந்த வெடிக்காத பரலில் இருந்த பல டசின் கிலோ வெடி மருந்தை புலிகள் மீட்டெடுத்து, புகையிலைச் சிப்பத்துக்குள், மறைவாக வைத்து, லொறி மூலம் கொழும்புக்குக் கடத்தினர் என்றும், அந்த வெடி மருந்தே பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன மீதான தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது என்றும் புலிகளின் தலைவர் ஒருவர் பின்னர் என்னிடம் கூறினார்.)

இந்தக் கட்டுரைத் தொடருக்கு இவை தொடர்பற்றவை. ஆனால் ஒரு விடயத்திற்காக இதனைக் குறிப்பிட்டேன். அந்த பரல் குண்டு உருட்டி விடும் இராணுவ சரக்குத் தாங்கிச் சீன விமானம் தொடர்பில் யாழ். மக்கள் பீதியில் உறைந்து கிடந்த காலம் அது. இந்த விமானத்தை ஆங்கில பெயர் குறிப்பிட்டு எழுதுவது கஷ்டமாக இருந்தது. தலைப்பில் அந்தப் பெயரை குறிப்பிடவும் முடியவில்லை. பார்த்தோம். ஒரு முடிவு செய்தோம்.

பெரிய தேர் போல பருத்து, அகன்ற ரதங்களை ‘சகடை’ என்று அழைப்பது வழமை. சப்பரம் கூட சகடையில்தான் கட்டுவார்கள். வானத்தில் பறந்து வரும் சகடையாக அந்த சரக்குத் தாங்கி விமானத்தைக் கற்பனை பண்ணி அந்த விமானத்துக்கு ‘சீனச் சகடை’ என்று பெயர் சூட்டி எழுதினோம். ‘சீனச் சகடை’ என்றோ ‘சீனச் சகடை விமானம்’ என்றோ தலைப்பிட்டு எழுதினோம். அந்த நேரத்தில் அந்த விமானத்தின் ஒரிஜினல் ஆங்கில பெயரிலோ அல்லது வை – 8 ரக இராணுவச் சரக்கு விமானம் அ என்றோ நாம் குறிப்பிடவில்லை. அப்படில் குறிப்பிட்டால் வாசகர் யாருக்கும் அதை புரிந்து கொள்ள முடியாது இருந்திருக்கும். ‘சீனச் சகடை விமானம்’ என்ற என்று சொன்னால்தான் தெரியும் – இன்றும் கூட.

அதுபோல பெயர் சூட்டுவது, பட்டம் சூட்டுவது என்பவை ஒரு கலை. பொருத்தமான சமயத்தில், பொருத்தமான சந்தர்ப்பம் பார்த்து அதனைச் செய்ய வேண்டும். அதில் வல்லவராக இருந்தார் எஸ்.டி. சிவநாயகம் ஐயா.

விவேகானந்தன் செல்வகுமார் ஆனந்தன் அல்லது ஆனந்தன் என்ற புகழ்பெற்ற ஒரு தமிழர் இருந்தார். பல சாதனைகளை புரிந்த அவரை இந்தப் பெயர் குறிப்பிட்டு கூறினால் உங்களில் யாருக்கும் தெரியாது. ஆனால் ‘ஆழிக்குமரன்’ ஆனந்தன் என்றால் எல்லோருக்கும் தெரியும். சாதனைக்கு மேல் சாதனை படைத்த சாதனை மன்னன்.

வழக்கமாக கின்னஸ் சாதனை படைத்தவர்கள் பற்றித்தான் பேசுவோம். கின்னஸ் சாதனை புத்தகத்தில் அதிக கின்னஸ் சாதனை புரிந்தவர் என்று பெயர் எடுத்த சாதனையாளர் அவர். கின்னஸ் சாதனையில் சாதனை படைத்தவர். அவருக்கு அந்தப் பெயரை – ‘ஆழிக்குமரன்’ என்ற நாமத்தை – சூட்டியவர் எஸ்.டி.எஸ். ஐயா தான்.

1963ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்தி கடந்த சாதனையை நிலைநாட்டிய போது ஆனந்தனுக்கு வயது பதினெட்டு. அச்சமயத்தில் தாம் ஆசிரியராக இருந்த வீரகேசரியில் இந்தச் சாதனையைப் பாராட்டி மலரை வெளியிட்டார் சிவநாயகம் ஐயா. ஆனந்தனுக்கு ‘ஆழிக்குமரன் ஆனந்தன்’ என்று பட்டம் சூட்டி பெருமைப் படுத்தினார். அந்த நாமமே ஆனந்தனுக்கு நிரந்தரமானது.

1984 ஒகஸ்ட் 6 ஆம் திகதி ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியின் போது குளிரால் பாதிப்புற்று அந்த முயற்சியின் மத்தியிலேயே அவர் உயிர் பிரிந்தது.


‘குளிர்ந்த கடலே கவலை தருகிறது. அதற்கேற்ப என்னை தயார் செய்யக் கால அவகாசம் போதவில்லை’ – என்று அவர் தெரிவித்தார். இதுதான் அவர் இறக்கு முன்னர் கூறிய கடைசிச் சொற்கள்.



அந்த உலகமகா சாதனையாளரின் வரலாறு சிவநாயகம் ஐயா சூட்டிய ‘ஆழிக்குமரன்’ என்ற பெயரில் கட்டவிழ்வது பொருத்தமானதுதான்.

அதுபோல இன்னொரு சான்றாளனுக்கும் சிவநாயகம் ஐயா பட்டம் அளித்தார். அந்தப் பட்டமும் கூட பெரிதும் மெச்சப்படுகின்றது.

இது, 1982 இல் கொழும்பில் நடந்தது.


பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன்

அகில இலங்கைக் கம்பன் கழகம் கொழும்பில் நடத்திய கம்பன் விழாவில் பின்னணியில் நின்று செயற்பட்டார் சிவநாயகம் ஐயா. அந்த நிகழ்ச்சியில் பேசிய திருச்சி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணனின் உரையைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனார் சிவநாயகம் ஐயா. வழமையாக மேடைகளில் ஏறிப் பேசுவதைத் தவிர்த்து வந்த அவர், அன்று பேராசிரியரின் பேச்சு முடிந்ததும் தாமாகவே மேடையேறி பேராசிரியரை ஆரத் தழுவினார். கம்பராமாயணத்தை அழகு சொல்லாடலில் அமுதாகத் தந்த பேராசிரியரின் திறனைப் பாராட்டிப் பேசியமை மட்டுமன்றி அவருக்கு மேடையில் வைத்தே ‘கம்ப கலாநிதி’ என்ற பட்டமும் அளித்து கௌரவித்தார்.

பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் பட்டங்களைத் தாங்கிச் செல்பவர் அல்லர். எளிமை விரும்பி அவர். எனினும் சிவநாயகம் அவருக்குச் சூட்டிய ‘கம்ப கலாநிதி’ என்ற பட்டம் பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதி பட்டம் போல அவருக்கு நிலைத்து விட்டது.

திறமை எங்கிருந்தாலும் தேடிச் சென்று பாராட்டுவதும் திறமையாளர்களைப் பாராட்டி ஊக்குவிப்பதும் சிவநாயகம் ஐயாவின் பண்பியல்பு. சுதந்திரன், வீரகேசரி,தினபதி, சிந்தாமணியிலும் பின்னர் சூடாமணியிலும் பல சிறுகதை எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் உருவாகுவதற்கு அவரின் இந்த இயல்பு காரணமாக அமைந்தது. திறமையானவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, தமது பத்திரிகையில் இடமளித்து, வழிகாட்டுவார். அவரவர் துறைகளில் அவரவர் மேலும் தேறி உயர வழிகாட்டல்களைத் தாமாகவே முன்னின்று வழங்குவார். எழுத்துத் துறையில் இருக்கும் பலர், நாம் சிவநாயகம் ஐயாவின் ஊக்குவிப்பில் வளரப் பெற்றவர்கள் என்று புகழாரம் சூட்டுவதற்கு அடிப்படை காரணமாக அமைந்தது அவரின் இந்தப் பண்பியல்புதான்.

நான் கூட எனக்குப் புனை பெயர் வைத்தேன். அது பற்றி விளக்கி எனக்கு ஒரு குட்டு வைத்தார் சிவநாயகம் ஐயா. அதனை நாளை பார்ப்போம்.

(வளரும்....)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 139

**371. அகதிகளென வெளியேறியவர்கள், தாங்கள் நோக்கிப் புறப்பட்ட மேலைத்தேய நாடுகளை விட்டு வேறெங்கும் தங்கியிருக்க விரும்பியிருப்பார்களா?**

விரும்பவில்லை என்பதைச் சந்தித்த பலரிடமிருந்து அறிந்திருந்தேன். ஆஸ்திரேலியா வந்தவர்களில் பலபேர் அவர்களது விண்ணப்பங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலங்களில், முகாம்களில் முடக்கப்பட்டு பின் நாறு (Nauru) பப்புவா நீயுகினி ( Papua New Guinea) போன்ற வெப்பமான பின் தங்கிய நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். விண்ணப்பதாரர்களின் அடையாளங்களும் பின்னணிகளும் பரிசீலினையில் உள்ளன என்று வருடக்கணக்கில் காலங்கள் இழுத்தடிக்கப் பட்டன. ஆனாலும் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்து விட இவற்றைச் சகிக்க வேண்டும், அவையெல்லம் பரவாயில்லை என்ற மனப்பாங்கே இருந்தது. கனடா, அமெரிக்கா, ஐரோப்பாவின் பல நாடுகளுக்கென இப்படி புறப்பட்டவர்களும் இப்படியான கஷ்டங்களை வேறுவிதங்களில் எதிர்நோக்கினார்கள்.

அவ்வாறு புலம்பெயரை அடைந்த மக்கள் விடு தலைப் போராட்டத்துக்கு அளவற்ற பங்குதந்தவர்கள். அந்தப் பங்கினைச் சிலர் சிலேடையாக விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடந்தால் தான் தங்களுக்கு சாதகமாக பதில்கள் வரும் என்பதற்காக முன்னிற்கி றார்கள் என்பார்கள். கிடைத்தபின், அவர்களைப் போராட்டங்களில் காணமுடியாது, தமிழீழம் கிடைத் தாலும் திரும்பி அங்கு சென்று குடியேறி வாழமாட் டார்கள் என்றும் சொல்லப்படுவது உண்டு.

அவர்கள் அங்குள்ள வன்முறையால்தான் வெளியேறினார்கள் என்ற நியாயம் அவர்கள் பக்கத்தில் என்றும் இருந்தது.

இப்படியாக வேறு வழியின்றி வெளியேறி, வருடக்கணக்கில் முகாம் வாழ்க்கைகளுக்கே பழகிக் கொண்டுவிட்ட, அல்லது அவற்றைப் பாவித்து வசதி களைத் தேடமுனையும் ஒரு சமுதாயத்தை எப்படி ஒரு நாட்டை – தேசத்தை அமைக்கும் – மனப்பாங்குக்கு நெறிப்படுத்துவது என்பது ஆழமான சமுதாயப் பிரச்சினை. அதற்குத் தமிழ் மக்கள் முகம் கொடுத்து, இயலாத்தன்மை யினால் தாங்கள் வெளியேறி, பல நாடுகளிலே வாழ்ந்து, 'தமிழ் ஈழம்' என்பதை நினைவுகளிலே சுமக்கப் போகிறோமா அல்லது வெளியேறியவர்களுக்கு ஊக்கம் தந்து வேர்களுக்குத் திரும்பப் போகிறோமா என்பதும், மக்களும் அவர்களுக்காக இயங்கும் அரசோ மற்ற கட்டுமானங்களோ ஆழ விவாதித்து, தீர்க்கமான யதார்த்தத்தில் பயணிக்க வேண்டும். குஞ்சுகள் இல்லாமல் கூடுகள் ஏன்? மக்களில்லாது நாடும் தேசமும் ஏன்? உறுதிகளைப் பெட்டகங்களில் வைத்துக் கொண்டு அனுபவிக்க இயலாத வீடும் காணியும் ஏன்? – என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்திய ஒப்பந்த அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்கள், அவர்களது பழைய, இடம்பெயர்ந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் எனில், அதனை இந்தியா தாங்களே ஒருதலைப்பட்சமாகத் தமது முகாம்களை மூடி இதுவரை காலத்தில் செய்திருக்கலாமே?

இங்குதான் தமிழ் மக்களது அரசியலையும் புரிந்து கொள்ளவேண்டும். ஒப்பந்தம் ஏற்பட்டு சிறிது காலங் களிலேயே விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் போர் மூண்டது.

போர் தொடங்கிய சில நாள்களிலேயே விடுதலைப் புலிகளினால் அவர்களது புலம்பெயர் அமைப்பாளர்கள், பிரபாகரனுக்காக 16 நவம்பர் 1987 ஐ.நாவின் காரிய தரிசிக்கு கோரிக்கை வைத்தனர்.

தங்களுக்கு ஸ்ரீலங்காவுடனுள்ள உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தற்சமயம் ஆக்கிரமிப்புகாரர் களாக மாறிவருகிறது. தமிழ்ஈழத்தின் மேல் நடத்தப்படும் ஆக்கிரமிப்பை நிறுத்தவும், தமிழ்மக்களை, அவற்றை ஸ்ரீலங்காவோடு உள்நாட்டிலேயே தீர்க்க வழிவகுக்கும் விதத்தில் இந்தியப் படைகளின் வெளியேற்றத்தை உறுதிப்படுத்தவும் கேட்டார்கள். அந்தக் கோரிக்கை, ஐ.நாவின் காரியதரிசியால், ஐ.நா. மனி உரிமை மன் றுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக ஐ.நா. காரியதரிசி விடுதலைப் புலிகள் தரப்புக்குப் பதில் தந்தார். அதற்கு பதிலாக விடுதலைப் புலிகள் திரும்பவும் ஐ.நாவின் காரியதரிசிக்கு இந்தியா தங்களது உள்நாட்டுப் பிரச்சினை களில் தலையிட்டு அட்டூழியங்கள் செய்கிறது எனவும், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுமிடையே சமரசம் செய்வதாகக் கூறி உள்நுழைந்த இந்திய அரசின் படைகள் இன்று எங்கள் நாட்டில் கால்களை ஊன்ற கோருகிறார்கள் எனவும், அதற்காக இந்திய சிவில் அதிகாரிகளைத் தருவித்து நிர்வாகங்களை அவர்களி டம் கொடுப்பதும், பொலிஸ் பணிகளை இந்திய பொலிஸாரே செய்வதும் அவற்றுக்கு வசதியாக ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் ஒரு இராணுவமுகாம் இவர்களின் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர்.

இன்று இங்கு இந்தியப் படையினரின் செயல்பாடு களால் குடிப்பதற்கு தண்ணீர் தட்டுப்பாடு உண்டு, வாகனங்கள் ஓடுவதற்கு கட்டுப்பாடுகள் நிலவுவதால் பாரிய உணவுத் தட்டுப்பாடு எழுந்துள்ளது. எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உணவிற்காக ஏங்கிப் பட்டினியால் வாடுகிறார்கள். பெண்கள் பெருமளவில் கற்பழிக்கப்படுகிறார்கள் எனப் பல சம்பவங்களை விவரித்து மனித உரிமை சபையிலிருந்து இவற்றை விசாரிக்க அதிகாரிகளை அனுப்பி, அதேசமயம் இந்தி யாவை இப்படியான அட்டூழியங்களை நிறுத்தி பேச்சுக்களால் இணக்கத்திற்கு வந்து வெளியேற அறிவுறுத்துமாறு கோரப்பட்டது.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் நிலைக்கு சார்பான அவர்களது புலம்பெயர் அமைப்புக்கள் 18,19 டிசெம்பர் 1987 இல் பாரிஸில் கூடி நிலைமைகளை ஆராய்ந்து நிறைவேற்றிய தீர்மானங்களில் ஸ்ரீலங்கா வின் நிலைமை, இந்தியப் படைகளினால் நிர்மூல மாக்கப்பட்டுள்ளதால் சர்வதேசத்திலிருந்து வெளிநாடு களில் உள்ள அகதிகள் யாரையும் திருப்பி அனுப்பக் கூடாது என ஐ.நாவுக்கும் சர்வதேசத்துக்கும் கோரப் பட்டது. உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா உள்ளிட்டு தாங்கள் காலூன்ற வழிகள் செய்வதாகவே இந்த அமைப்புகளும் குற்றம் சுமத்தின.

தமிழ் மக்களால் ஸ்ரீலங்காவோடு எதுவித இணக்கமும் காணமுடியாது என சர்வதேசத்திடமும், முக்கியமாக இந்தியாவிடமும் அணுகிறோம். ஆனால் தமிழ் மக்களது அரசியலோ, அது உள்நாட்டுப் பிரச்சினை என சர்வதேசத்துக்கு அறிவித்து இந்தி யாவிற்குக் கதவடைத்தது.

(வளரும்)

### THE LTTE LEADER APPEALS TO THE U.N.

***Reproduced below in its entirety is the text of the letter addressed to The Secretary General, U.N.O. by Mr. Prabhakaran, the Leader of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), which, at least to some extent, represents the spin-offs of the so-called Peace Accord.***

"Your Excellency, We wish to refer to our letter of 16.11.87 addressed to you. We acknowledge your reply stating that the matter was referred to the Human Rights Commission of United Nations. The so-called "IPKF" (Indian Peace Keeping Force) continues relentlessly its atrocities on the people of the Northern and Eastern Provinces. The Indian Government intervened in the internal problem of Sri Lanka to mediate between the Sinhalese and the Tamils. Now they are trying to gain foothold in our land. Indian Civil Administrators have been brought here and they are being engaged in civil administration. The police duties are being done by the Indian police. Military camps and sentry posts have been set up within the distance of every kilometre. Military camps have been opened in the following Educational Institutions:

Jaffna College - Vaddukkoddai.
Hindu College - Karainagar.
St.John's College - Jaffna.
Central College - Jaffna.
Ladies' Convent - Pandatharippu.
Union College - Tellippalai.
Ramanathan College - Maruthanamadam
Ladies' College - Uduvil.
Arumugam Vidhyasalai - Mallakam.
Maha Vidhyalayam - Sandilipai.
Murugamoorthy Vidhyalayam - Suthumalai.
Ramakrishna Vidhyalayam - Kondavil.
Saivaprakasa Vidhyasalai - Sithankerni.
Maha Vidhyalayam - Thiruvadinilai;
and many other centres unknown to us in the Peninsula.



**V.Prabhakaran, the LTTE Leader**

Curfew has been continuously imposed for more than one and a half months apart from occasional relaxation of a few hours in specified areas in the Northern and Eastern Provinces. Jaffna Peninsula is in darkness because of the power cut imposed by the Indian Army. Consequently, all the industries are at a standstill. Drinking water supply is at a standstill. Transport is curtailed to the minimum and a few vehicles are allowed to ply with passes issued by the Indian army. The Peninsula is suffering from severe food shortages and 800,000 people are on the verge of starvation. Fishing and agriculture are at a standstill. This has brought about an economic depression. Most of the hospitals and nursing homes remain closed, and infectious diseases are on the increase owing to lack of medical facilities. Indiscriminate artillery and cannon shellings on residential areas continue unabated consistently and consequently several people get killed or wounded. Nearly two thousand innocent civilians have been already killed as a result of the military offensive undertaken by the Indian Government. For example - on 9.11.87 four civilians were injured by shellings at Sandilipai and they were taken to Jaffna General Hospital in a car bearing a white flag. The car was shot at by the Indian army at Navaly; the four injured and the two who were taking them were killed, and the car was burnt.

*15th January 1988* TAMIL VOICE INTERNATIONAL 9

Raping has become a daily occurrence. When the people brought these incidents to the notice of the Indian army officers, the reply given by them was that such things are quite common during war time. At Uduvil, four girls were raped by the Indian army personnel. When the parents reported this to Major Parameshwaran and Captain Sharma, Major Parameshwaran admitted that such incidents had taken place and apologised for what had happened. On 5.11.87, The Indian army broke open a store at Urumpirai and asked the people around to remove the things they wanted. When the people got into the store, all the males were ordered out and the women who were inside the store were brutally raped. One of those raped was a two-month preg nant woman and the other is a small girl who had not attained age.

There is a systematic destruction of all schools, houses and business establishments. The business centres at Urumpirai, Thirunelvely and Jaffna Bus-stand areas where businesses were manned, were the places where burglaries were committed by the Indian army.

It could be proved by the secret message sent by a person named Chopra to the Palaly Army Commander, intercepted by us, that the 48 hour cease-fire announced by the Indian Government on 21.11.87 was not observed by the Indian armed forces. In Trincomalee, seven innocent civilians were shot and two of them died on the spot during the period of cease-fire. They carried out many search-and-destroy missions in that period, and many people were arrested.

There is no truth in the Indian propaganda that food is being distributed, relief being given and the situation is returning to normal. This is being done to deceive the world community at large.

They have silenced all local news, and are not allowing the foreign correspondents to enter this area. There are no telephone links. Every possible way has been blocked to the outside world not to get to know the truth.

We appeal to you to send a team of investigators from the Human Rights Commission to inquire into the violation of human rights and the army atrocities. You may also request the Indian Government to stop the military offensive operation, and to start negotiations to solve all related matters. It would allow our people to live peacefully without any form of persecution by the armed forces. No time should be lost as our people can no longer endure the sufferings."

# ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழிபடி அரசு செயற்படுமாயின் வரவேற்கலாம்!

## அவர்கள் அவ்வாறு செயற்படவேமாட்டார்கள் என்பதை கடந்தகால வரலாறுகள் கூறுகின்றன என்கிறார் சுரேஷ்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.22

அரசாங்கம் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு உறுதியளித்தபடி உண்மையாகவும் நேர்மையாகவும் எதிர்காலத்தில் செயற்படுமாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் அதனை அவர்கள் செய்யமாட்டார்கள். இதனை கடந்த கால வரலாறு தெளிவுபடுத்துகின்றதென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்று இரண்டு வருடங்களாகும் நிலையில் முதன்முறையாக ஐ.நாவின் பொதுச் செயலாளரை சந்தித்து பல்வேறுபட்ட விடயங்களை கலந்துரையாடினார் என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

இதன்போது தடுப்பில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுவித்தல், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், ஐ.நாவுடன் இணைந்து செயற்படுவோமென்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக பல மில்லியன் ரூபா நஷ்டஈடாக வழங்குவது தொடர்பாகவும் அவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உள்ளக ரீதியாக புலம்பெயர் தமிழர்களை உள்ளடக்கி பேச்சு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சியாக ஜனாதிபதியில் இருந்து கீழ் மட்டம் வரை வெளிநாடுகளுக்கு கொடுக்கின்ற செய்திகள் என்பது மிக மிகத் தவறான பிழையான செய்திகளாகவே காணப்படுகின்றன.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களில் பங்கேற்ற பெற்றோர்கள் பலர் இறந்துவிட்டார்கள். ஆனால் இன்னும் கூட அவர்களை அழைத்து காணாமலாக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்ன நடந்தது என்பது பற்றி பேசுவதற்கு ஜனாதிபதி தயாராக இல்லை. அண்மையில் ஒரு விடயம் ஒன்றை ஜனாதிபதி கூறியிருந்தார். 'காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஆய்வுகளும் விசாரணைகளும் இனிமேல் தேவையில்லை என்றார்' அவர் தான் மரணச் சான்றிதழ் கொடுக்க இருக்கின்றார். ஆகவே, காணாமலாக்கப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்பதை மிக சூசகமாக கூறியுள்ளார் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டி இருக்கின்றது.

எனவே ஜனாதிபதி ஐ.நாவின் செயலாளருடன் பேசிய விடயங்கள் இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக தெளிவாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டால் காணாமலாக்கப்பட்டோருடைய பெற்றோரின் போராட்டங்கள் சில சமயம் முடிவுக்கு வரலாம். இது தொடர்பாக சர்வதேச சமூகம் விசாரிக்க இருக்கிறதா இல்லையா என்பதை அறியலாம். ஏறத்தாழ 16 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டு இருக்கின்றனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவார்களா நடத்தமாட்டார்களா என்பதை அறியக்கூடியதாக இருக்கும்.

காணாமலாக்கப்பட்டவர்களை கூட்டிச் சென்றமைக்கு சாட்சிகள் உள்ளன. அவ்வாறானவர்கள் கொல்லப்படுவார்கள் என்பதற்கான சாத்தியங்கள் இல்லை என பல உறவினர்கள் நம்புகிறார்கள். இது சம்பந்தமாக ஜனாதிபதி நாடு திரும்பியதும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூற வேண்டும்.

நஷ்டஈடு கொடுப்பதாக இருந்தால் அந்த நஷ்டஈடு என்பது ஒரு சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப கொடுக்கப்படுமா? அல்லது இலங்கையில் ஒரு லட்சம் இரண்டு லட்சம் ரூபாவை கொடுத்து அவர்களை ஏமாற்றப் போகின்றார்களா என்பதையும் தெளிவாக தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். நஷ்டஈடு கொடுக்கும் போது நிச்சயமாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேச தரத்துக்கு ஈடாக அது வழங்கப்படவேண்டும் என்பது முக்கியமான கோரிக்கை. ஆகவே, இந்த விடயங்களில் தெளிவுபடுத்தினால் நஷ்டஈடு வாங்க விரும்பக்கூடிய பெற்றோர்கள் அனைவரும் எங்களுக்கு எவ்வளவு நஷ்டஈடு கிடைக்கும் என்பதை அறியக்கூடியதாக இருக்கும்.

வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஒரே விதமான கதைகளை சர்வதேச சமூகத்துக்கு தெரிவிக்கின்றனர். நாங்கள் இதனைப் பார்ப்போமானால் 'முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்று' அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக தோற்றப்பாட்டை காட்ட முயற்சிக்கின்றது.

சாதாரணமாக இரண்டு நாட்டு ஜனாதிபதியோ வெளிவிவகார அமைச்சரோ சந்திக்கும் பொழுது கூட்டறிக்கை விடுவது என்பது ஒரு முக்கியமான விடயமாகும். அது இரண்டு தரப்பும் பல்வேறுபட்ட விடயங்களை ஏற்றுக் கொண்டால் - ஒத்துக்கொண்டால் - அவற்றை கூட்டாக வெளியிடுவர்.

இங்கு இவர்கள் என்ன பேசினார்கள் என்ற விடயத்தை மாத்திரம் ஒரு தரப்பு மாத்திரமே சொல்கிறது. அதாவது இலங்கை ஜனாதிபதியின் தரப்பு, நாங்கள் என்ன பேசினோம் அவர் என்ன பதில் சொன்னார் என்ற விடயங்களைக் குறிப்பிடுகின்றது.

அரசாங்கம் தான் சொன்னபடி எங்களிடம் உண்மையாகவும் நேர்மையாகவும் எதிர்காலத்தில் செயற்படுமாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் இதனை அவர்கள் செய்யமாட்டார்கள் என்பதைக் கடந்த கால வரலாறு தெளிவுபடுத்துகின்றது. - என்றார்.

# வடமாகாணத்தில் 88 ஆயிரம் பேர் எந்தத் தடுப்பூசியும் பெறவில்லை!

## மாகாண சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன் தகவல்

**(கலையமுதன்)**

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88 ஆயிரம் பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.



வட மாகாணத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வட மாகாணத்தில் தற்போது கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த அடிப்படையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகளில் முதலாவது தடுப்பூசி இதுவரை 5 லட்சத்து 59 ஆயிரத்து 129 பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது வட மாகாணத்தில் இருக்கின்ற 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 86 சதவீதமாகும். இதே போன்று இரண்டாவது தடுப்பூசி 4 லட்சத்து 49 ஆயிரத்து 524 பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது 70 சதவீதமாகும்.

இதுவரை 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88 ஆயிரம் பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த தொகையிலே 40 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இலங்கை முழுவதிலும் தடுப்பூசி போடாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகம் உயிரிழந்துள்ளனர். எனவே இந்தத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களை உடனடியாக வந்து தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இதேவேளை வட மாகாணத்தில் நேற்று 20 - 30 வயதுக்கு இடையிலான ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 550 பேருக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. சில மாவட்டங்களில் நேற்று முன்தினமே ஆரம்பிக்கப்பட்டது. தடுப்பூசி போடும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் அறிவிப்பார். ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் தேசிய அடையாள அட்டையை காண்பித்து தங்களுடைய தடுப்பூசியை பெற்றுக் கொள்ளமுடியும். நேற்று இந்த வயதினருக்கு வழங்கும் பணிகள் இடம்பெற்றாலும் இதே நிலையங்களில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. - என்றார்.

# மட்டு.குறுமண்வெளி வாவியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுமண்வெளியில் உள்ள வாவியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று (புதன்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டது.

புதன்கிழமை காலை வாவியில் சடலம் ஒன்று கிடப்பதாகக் கிடைத்த தகவலினையடுத்து களுவாஞ்சிகுடி பொலிஸாரால் இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தடயவியல் பொலிஸாரும் சடலத்தை பார்வையிட்டதுடன், குறித்த நபர் பாவித்தார் எனக் கருதப்படும் ஊன்றுகோல் ஒன்றும், ரோச் லைட் ஒன்றும் ஆற்றங்கரை ஓரமாக கிடந்த நிலையில் பொலிஸார் மீட்டுள்ளமையுடன், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணிவரைக்கும் தமது வீட்டிலிருந்த குறித்த நபர் அதன்பின்னர் காணாமல் போயிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மீட்கப்பட்டவர் 68வயதுடைய குறுமண்வெளி,பழைய தபாலக வீதியைச் சேர்ந்த குமாரய்யா கோபாலசாமி என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் நிலைமையைப் பார்வையிட்டு அவரது முன்னிலையில் ஆற்றிலிருந்த சடலம் மீட்கப்பட்டமையையடுத்து சடலம் தம்முடைய உறவினர் தான் என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சடலத்தைப் பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தை பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இரு கைக்குண்டுகள்

நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் குப்பைத் தொட்டியில் இருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த குப்பைத் தொட்டியிலிருந்து கழிவுகளை அகற்றும் சந்தர்ப்பத்தில் நகர சபை பணியாளர் ஒருவரால் இந்த கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என எள பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அந்தக் கைக்குண்டுகள் குறித்த குப்பைத் தொட்டியில் எவ்வாறு வந்தது என்பது தொடர்பாக இன்னும் உரிய தகவல்கள் கிடைக்கப்பெறாத நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வல்வெட்டித்துறை நகர சபையின் ஆட்சியை இழந்தது கூட்டமைப்பு!

## சுயேச்சைக் குழு உறுப்பினர் செல்வேந்திரா தலைவராகத் தெரிவு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சுபாரத்தினம் செல்வேந்திரா நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு மேலதிக வாக்கால் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ரெலோ உறுப்பினர் சதீஸ் 8 வாக்குகளையும், சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்ட செல்வேந்திரா 9 வாக்குகளையும் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பான உபதவிசாளர், சுயேச்சைக் குழுவுக்குச் சார்பாக வாக்களித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு அமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நகர சபை மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

நேற்றைய அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சுயேச்சைக்குழு 4 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன தலா 2 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஓர் உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.

## மூத்த ஊடகவியலாளர் அந்தோனி மார்க் கொரோனாத் தொற்றால் முல்லையில் மரணம்



மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க் தனது 80 ஆவது வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முல்லைத்தீவு வைத்தியசாலையில் காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். இவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ.அந்தோனி மார்க் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

குரலற்ற மக்களின் குரலாகவும் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்கவும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்ததோடு, பல்வேறு போராட்டங்களையும் தலைமை தாங்கி முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கைதிகள் அச்சுறுத்தல்; விசாரணைக்குக் குழு

### நீதியமைச்சர் நடவடிக்கை



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சம்பந்தப்பட்ட சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக விசாரிக்க குழுவொன்றை நியமிக்க நீதி அமைச்சர் அலி சப்ரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டதாக ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று (புதன்கிழமை) செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழுவை நியமிக்க நீதி அமைச்சர் எதிர்பார்க்கிறார் என அவர் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, இரண்டு கைதிகளை மண்டியிடச் செய்து கொலை அச்சுறுத்தல் விடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, லொஹான் ரத்வத்த கடந்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியுடன் பேசத் தயார் புலம்பெயர் தமிழர்கள் அறிவிப்பு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்புகொள்ளத் தயாராக இருக்கிறோம் என லண்டனில் உள்ள ஒரு செல்வாக்குள்ள புலம்பெயர் தமிழ் குழுவொன்று தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வந்தமை ஒரு முற்போக்கான நடவடிக்கை என உலகத் தமிழர் பேரவை என்ற அந்தக் குழு தெரிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸிடம் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகள் நாட்டின் உள்ளகப் பொறிமுறையின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், இது தொடர்பான கலந்துரையாடல்களுக்கு புலம்பெயர் தமிழர்களை அழைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ் புலம்பெயர் மக்களுடன் தொடர்புகொள்ள விரும்புகிறார் என்பது நிச்சயமாக ஒரு முற்போக்கான நடவடிக்கை என்றும் அதை தாம் வரவேற்கிறோம் எனவும் உலகத் தமிழர் பேரவையின் செய்தித் தொடர்பாளர் சுரேன் சுரேந்திரன் கூறியுள்ளார்.

இருப்பினும், ஆறு மாதங்களுக்கு முன்பு, மார்ச் 2021 இல், உலகளாவிய தமிழ் மன்றம் போன்ற தடைசெய்யப்பட்ட அமைப்புகளை அரசாங்கம் வர்த்தமானியாக வெளியிட்ட நிலையில், ஜனாதிபதியின் திடீர் மனமாற்றம் குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் தாங்கள் இலங்கை மக்களுக்கு உதவுவதை நிறுத்தவில்லை என்றும் அண்மையில்கூட, பல மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்கும் வழங்க முன்வந்தோம் எனஅவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இலங்கையின் அனைத்து மக்களின் குறைகளையும் தீர்க்க, தாங்கள் யாருடனும் பேசத் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பேச விரும்பும் உள்நாட்டு வழிமுறைகளைப் பொறுத்தவரை, நீதித்துறை அல்லாத செயல்முறைகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விவாதிப்பதற்கும் மகிழ்ச்சியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றிணைந்த சுகாதார சேவை ஊழியர் நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு!



நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார சேவை ஊழியர்கள் சங்கம் நேற்று (புதன்கிழமை) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தீர்மானித்தது.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக சங்கத்தின் பிரதான செயலாளர் தெம்பிட்டியே சுதகானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொரோனா விசேட கொடுப்பனவான 7 ஆயிரத்து 500 ரூபாவை மீள வழங்க வேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் பிரதான நோக்கமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை - லாட்வியா குடியரசுக்கிடையிலான இருதரப்பு தொடர்புகள் தொடர்பில் அவதானம்!

கொழும்பு, செப். 23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், லாட்வியா குடியரசின் ஜனாதிபதி எகில்ஸ் லெவிட்ஸ் இற்கும் இடையிலான சந்திப்பொன்று, செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத்தொடரின் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு மத்தியில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் 25 வருடகால தூதரகத் தொடர்புகளைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்காக, பலமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பது, இரு அரச தலைவர்களதும் கருத்தாக அமைந்திருந்தது.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக, பொருளாதாரம் மற்றும் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பிலும், இரு நாடுகளினதும் அரச தலைவர்கள் அவதானம் செலுத்தியதோடு, தொற்றுப்பரவல் நீங்கியவுடன், இரு நாடுகளினதும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

கல்வி, டிஜிற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில், இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை அதிகரித்துக்கொள்வது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அமைப்பு மாற்றம்பெற வேண்டும் என்பதோடு, ஆசியா, தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தென் அமெரிக்க வலய நாடுகளுக்கு அதிகப்படியான அங்கத்துவம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும், இரு நாடுகளினதும் அரச தலைவர்களினது அவதானம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் ஆகியோரும், இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)



குணாள் - காயத்ரி தம்பதியர்க்கு மாங்கல்யம் வழங்கும் பாபா

**சாயிநாதா!**
**எப்போதும் உதவியாற்றும், யாரையும் துன்புறுத்தாத மனவுறுதி தாரீர்!**
**வாழ்க்கைப் போராட்டத்தை முகங்கொடுக்கத் துணிவு தாரீர்!**
**ஏழ்மையில் வாடும் எளியோருக்குக் கைகொடுக்க உதவிக்கரம் தாரீர்!**
**நும்பணியாற்ற ஆரோக்கியமான உடல், உள்ளம் தாரீர்!**
**மானுட சேவையாற்ற நும்வழிகாட்டல், ஆசிகள் தாரீர்!**
**மன அமைதி, ஆன்மீக ஈடேற்றம் தாரீர்!**
**சுவாமி! நின்தாள் சதமென்று, ஒவ்வொரு நொடியும் நினது தாளிற் துஞ்சும் நற்பேறு அருளீர்!**

இதுவே சாயிபக்தர்களின் உருக்கமான வேண்டுதலாகும்.

பிரபலம் வாய்ந்த ஹிந்தி, கன்னட பின்னணி பாடகர் குணாள் கஜவாலா தன் பாபா அனுபவத்தைப் பின்வருமாறு கூறுவார்:-

‘1990ம் ஆண்டில் எனது கல்லூரி நண்பன் தன்னுடைய வீட்டுக்கு வந்து பகவான் பாபாவின் கருணையின் வெளிப்பாடான அற்புதங்களை, லீலைகளை நேரில் காணுமாறு அழைத்தார். அங்கு சென்றபோது விபூதி படர்ந்த பாபா படத்தையும், யேசு, புத்தர் ஆகிய ஏனைய படங்களையும் கண்டு வியப்படைந்தேன். பாபாவின் படங்களிலில் இருந்து வெளிப்படும் புனித விபூதி, தீர்த்தம் ஆகியவை மூலம் சிலரின் நோய் குணமானமை கண்டு அதிர்ச்சி அடைந்திருக்கிறேன்.

1993 - 94 காலப்பகுதியில் மும்பையில் நேரு கேட்போர் கூடத்தில் பகவான் பாபாவின் முதல் தரிசனம் எனக்குக் கிடைத்தது. அதுவே நான்அனுபவித்த மிகவுயர்ந்த அனுபவம், லீலை என்பேன். அந்த நொடிப் பொழுதிலேயே எனது மனம், வாழ்க்கை முழுமையாக மாற்றம் அடைந்தன. பாபா திருமணங்களை நடாத்தி வைப்பதைக் கேள்விபட்ட நான், எனது திருமணத்தையும் பாபாவே நடத்தி ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஆழ்மனத்தில் அவாவுற்றேன். ஆனால் எனது விருப்பம் கைகூடவில்லை. எனினும் எங்கள் திருமணத்தின்போது பவான்பாபா படத்தை முன்னிருத்தி, அதற்கு மாலையணிந்து, ஆரத்தி எடுத்திருந்தோம். எனினும், திருமணமான பின்னரும்கூட, சுவாமி முன்னிலையில் எங்கள் திருமணம் நடைபெறவில்லை என்ற கவலை உள்ளத்தை உறுத்தியவாறு இருந்தது.

2008ல் புட்டபர்த்தியில் நடைபெற்ற ஏகாதசி விழாவில் பாபா முன்னிலையில் பஜன் பாட யானும், எனது துணைவி ஸ்ரீமதி. காயத்ரி கஞ்சவாலாவும் அழைக்கப்பட்டோம். அவ்வாய்ப்பினை அரும்பேறாகக் கருதி அந்நிகழ்வில் பங்குபற்றினோம். என்ன அதிசயம் பஜன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, சுவாமி என்னையும், எனது துணைவியையும் மேடைக்கு அழைத்தார். ஒரு மாங்கல்யத்தையும், மோதிரத்தையும் உருவாக்கினார். எனது மனைவி மோதிரத்தைச் சரியான விரலில் அணிவதை உறுதிசெய்தார். அந்த குல்வந்மண்டபத்தில் எம்மிருவருக்கும் ஆன்மீகத் திருமணம் - திருக்கல்யாணம் - நடாத்தி வைத்து எனது வேணவாவை நிறைவேற்றினார். - என்றார் அவர்



சுவாமியுடன் மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன்

## மகாதேவனின் அனுபவம்

இதனைத் தொடர்ந்து, சாயி பக்தர்கள் சாயி அடியான் மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவனின் சாயி அனுபவத்தைக் கேட்டின்புறுவர்:-

’என்னைப் பொறுத்தளவில் நான் பகவான் பாபாவை உளமாறப் பிரார்த்தித்து வேண்டிக்கொண்டபோதெல்லாம் அவரெனக்கு அருள்புரிந்து உதவியிருக்கிறார். போரிலும், அமைதிக் காலத்திலும், ஆபத்துக்களிலிருந்தும், கார் விபத்துக்களில் இருந்தும், காஷ்மீர் போரின் போது பாகிஸ்தானின் குண்டு வீச்சிலிருந்தும், சீனாக்காரனின் சண்டையிலிருந்தும், எத்தனையோ மரணத்தை நெருங்கக் கூடிய தருணங்களில் கூட என்னைக் கைதூக்கிவிட்டுக் காப்பாற்றியவர் பாபா.

1971 இல் பங்களாதேஷ் போர் நடந்து கொண்டிருந்த காலமது. பாகிஸ்தான் படை ஆக்கிரமத்திருந்த கிழக்கு பாகிஸ்தானில் உள்ள ஜெப்சிஸோர் என்ற நகரின் மீது நான் ஹெலிக்கொப்டரில் பறந்து கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் மெஷின் துப்பாக்கியால் சுட்டுத்தாக்கத் தொடங்கினார்கள். அப்போது என்நா ‘சாயிராம்! சாயிராம்!’ என்று உச்சரித்தது. உள்ளம் பகவான் பாபா பிரார்த்தனையில் ஈடுபட்டது. என்ன அதிசயம்! எனது கால்களுக்கிடையே பாய்ந்து மேலேயெழுந்த குண்டு என் மார்பைத் தாக்காமல் பகவானின் அபயக்கரத்தால், என் தோள் வழியே விலகிச்சென்றது.

1973 ஆண்டு. காஷ்மீர் மாகாணத்தின் வடகிழக்குப் பிரதேசத்தில், திபேத்தின் எல்லையில் லடாக பிரதேசத்தில் நான் ஜெனரல் கொமாண்டிங் ஆபீஸராகப் பணியாற்றிய வேளையது. சாங்லா கணவாயில் என் மெய்க்காப்பாளரும், நானும் இந்திய - திபேத்திய எல்லையைக் கடந்து கொண்டிருந்தபோது என் ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கி நொறுங்கிப் போக வேண்டிய நிலையிலிருந்தோம். அப்போது எனது பிரார்த்தனைக்குச் செவிசாய்த்த பகவான் எங்களைக் காப்பாற்றினார். இவ்வனுபவங்களால் பிரார்த்தனையின் வலிமையைப் புரிந்துகொண்டேன். பிரார்த்தனை மூலம் இருவகையான பயன்கள் நமக்குக் கிடைக்கின்றன.’ - என்றார்.

‘அவன் தாள்பட்டு அழிந்தது என் தலையெழுத்தே’ என்று சைவச் சான்றோர்கள் பாடிய பாடலின் அர்த்தம் புரிகிறது. பிரார்த்தனையின் மகிமையை பாபா கூறக் கேட்போம்:-

‘இக்கலியுகத்தில், நீங்கள் ஒருகரத்தால் செய்வது மறுகரத்தில் நிச்சயமாக வந்துசேரும்.

நுமது கருமங்களின் பெறுபேறுகளை அனுபவிக்க, கருமவினையை அனுபவிக்க நீங்கள் அடுத்த பிறவியைக் காத்திருக்க வேண்டியதில்லை.

நீங்கள் வனத்தில் வாழ்ந்தாலும், வானத்தில் பறந்தாலும், மலையின் உச்சியில் சஞ்சரித்தாலும், ஆழ்கடலில் இருப்பினும், நீங்கள் கருமவினையை அனுபவித்துத் தான் ஆகவேண்டும்.

இந்தகலியுகத்தில் நீங்கள் இங்கேயே, இப்பிறவியிலேயே உரிய முறையில் அனுபவிப்பீர்கள். அது நிச்சயம்.

ஆயினும், நீங்கள் அன்புசெலுத்தி, பலன்கருதா மானுடசேவை ஆற்றி, வழிபாடாற்றி இறையருள் பெற்றால், மலைபோன்ற தீவினைகள் நீறாகப் போகுமென்பது திண்ணம்.’



குணாள் - காயத்ரி தம்பதியரை ஆசீர்வதிக்கும் பகவான்

காலைக்கதிர் Kalaikkathir

# காயமடைந்த இரண்டு மீனவர்கள் கரைக்கு கொண்டு வரப்பட்டனர்!



பல நாள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றிருந்த படகில் பலத்த காயமடைந்த இரண்டு மீனவர்களை கடற் படையினர் கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு கரைக்கு கொண்டுவரப்பட்ட காயம டைந்த மீனவர்கள் சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

குறித்த படகு காலியில் இருந்து 120 கடல் மைல் (222 கி.மீ.) தொலைவிலுள்ள தென் கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனக் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வீடுகளில் சிகிச்சை பெறுபவர்கள் சாகவில்லை சுகாதார மேம்பாட்டு அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, செப். 23

வீடுகளில் சிகிச்சை பெறும் முறைமையின் கீழ் எந்தவொரு நோயாளரும் உயிரிழக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார மேம்பாட்டு அலுவலகப் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்தார்.

இதேநேரம், வைத்தியசாலைகளில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் கொரோனா நோயாளர்களுக்கு நாட்டில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசன் அளவு போதுமானதாக உள்ளதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 10 கோடி அமெ. டொலர் மேலதிக கடன் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்!

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து தடுப்பூசிகளைப் பெறுவதற்கு 10 கோடி அமெரிக்க டொலர் மேல திகக் கடனை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த மேலதிக நிதியிடல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொவிட் - 19 மூலோபாய தயார்ப்படுத்தல்கள் மற்றும் பதிலளிப்புகள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் கொவிட் 19 அவசர பதிலளிப்புக்கள் மற்றும் சுகாதாரத்துறையைத் தயார்ப்படுத்தல் கருத்திட்டத்துக்காக இந்தக் கடனைப் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த மேலதிக தொகை, 1.4 கோடி பைஸர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும் தடுப்பூசி வழங்கும் பணிக்கு ஏற்புடைய ஏனைய செலவுகளுக்குமான நிதியிடலுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி கோட்டாவின் கருத்து வாய்ச்சொல்லாகவே இருக்குமா?

## அருட்தந்தை ஜோசப்மேரி கேள்வி

அமெரிக்காவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து வாய்சொல்லாகவே இருக்கும். நடைமுறையிலிருக்காது என அருட்தந்தை ஜோசப்மேரி தெரிவித்துள்ளார். மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் இதற்கு முன்னிருந்த அரசாங்கம் மனித உரிமை மீறப்பட்டுள்ள வேளையில் நாங்கள் அதனை ஆவணம் செய்வோம் என்று ஐ.நாவில் கூறியிருந்தார்கள். அதுவும் கிடப்பில் கிடந்ததுடன், இந்த அரசையும் குற்றம்சாட்டியிருந்தார்கள் அத்துடன் எமது மக்களை விலைபேசி வந்துவிட்டார்கள்.

இதே பாணியில் ஜனாதிபதியும் அமெரிக்காவில் கூறியது பழைய அரசை போன்று வெறுமனே வாய் சொல்லே தவிர செயல்முறையில் நடக்குமா என்பது கேள்விக்குறி.

ஆகவே கண்துடைப்புக்காக இதை செய்கின்றார்களா? மனதார உணர்ந்து செயற்படுகின்றார்களா? இந்த மக்கள் நிம்மதியாக வாழ சிங்கள மக்களுடன் கைகொடுத்து வாழ இவர்கள் செய்ய வேண்டியது காலத்தின் தேவை.

ஆனால் வெளியில் இவ்வாறு பேசிவிட்டு மீண்டும் நாட்டுக்கு வந்து அவற்றை மறந்து விடுகின்றனர். இதை தான் நான் கடந்த காலங்களிலிருந்து பார்த்து வருகின்றேன்.

நாட்டில் உள்ள மக்களை பாகுபாடு இல்லாமல் ஜனாதிபதி கூறிய வார்த்தையை செயற்படுத்துவாராக இருந்தால் அவர் ஒரு பெயர் போன தலைவராவார். அவர் மக்களை இணைத்து செயற்பட வேண்டும் என்றும் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

# யாழ். குருநகர் கடற்பகுதியில் ஒரு தொகுதி மஞ்சள் மீட்பு!



யாழ்.குருநகர் கடற்பகுதி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட சுமார் 350 கிலோ மஞ்சள் கடற்படையினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்.குருநகர் - ஐந்து மாடி கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை அவதானித்த கடற்படையினர் அதனைப் பின்தொடர்ந்தபோது படகில் இருந்தவர்கள் தப்பிச் சென்றிருக்கின்றனர். இதனையடுத்து கடற்படையினர் படகை சோதனையிட்டபோது அதில் மஞ்சள் இருப்பது அவதானிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மாபெரும் மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்துகொள்ளக் கிடைத்தமையிட்டு, நான் பெருமையடைகின்றேன்.

76ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரின் அவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அப்துல்லா ஷாஹிட்டுக்கு என்னுடைய வாழ்த்துகளை முதற்கட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரே! நீங்கள் இலங்கையின் நீண்டகால நண்பராக இருக்கிறீர்கள். எதிர்வரும் காலங்களிலும், உங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிப் பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தொடரின் போது, மேதகு வொல்கன் பொஸ்கீர் (Volkan Bozkir) ஏற்றிருந்த பொறுப்புகளுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதோடு, இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் சிறப்பாகத் தமது தலைமைத்துவத்தை வழங்கி வரும் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸையும் பாராட்ட, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

கொவிட் - 19 தொற்றுப் பரவலானது, மானிட குலத்துக்கு, பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தொற்றுப் பரவலால் தமக்கு நெருக்கமானவர்களை இழந்துள்ள அனைவருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகம் முழுவதிலுமுள்ள சுகாதார மற்றும் அத்தியாவசியச் சேவை ஊழியர்களின் அர்ப்பணிப்புகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பிரச்சினை தொடர்பில், உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கும் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொவிட் - 19 தொற்றுப் பரவலின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களைப் பறிமாறிக்கொள்ளவும் சிறந்த முறையில் நாடுகளை மீளக் கட்டியெழுப்பவும், பிராந்திய தகவல் மையமொன்றை அமைப்பதற்கான ஒத்துழைப்பு, உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு வழங்க, இலங்கை எதிர்பார்க்கின்றது.

வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றல் மற்றும் சிகிச்சை முறைமைகளை அறிமுகப்படுத்துவதில், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேகமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளை, நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அதேவேளை, ஆபத்துமிக்க புதிய வைரஸ் திரிபுகள் பரவலடைவதைத் தடுப்பதற்கான தடுப்பூசி உற்பத்தி, விநியோகம் மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்ளல் போன்றன தொடர்பில் காணப்படும் சவால்களை உடன் வெற்றிகொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் அடையாளம் காணப்படல் வேண்டும்.

அனைத்து இடங்களிலுமுள்ள அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்வது, தொற்றுப் பரவலில் இருந்து மீள்வதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருப்பினும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தில், இலங்கை வெற்றி கண்டுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், முழுமையானளவில் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

ஒக்டோபர் மாத இறுதிக்குள், 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், முழுமையானளவில் தடுப்பூசி ஏற்றப்படும்.

மிக விரைவில், 15 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

சுகாதாரச் சேவை ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார், அரச ஊழியர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பே, இந்தத் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது.



தொற்றுப் பரவல் முகாமைத்துவத்துக்காக, இரு தரப்பு மற்றும் பல தரப்பு நன்கொடையாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி மற்றும் பொருள் உதவிகளால் இலங்கை பெரிதும் நன்மையடைந்தது.

அந்த நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, இவ்விடத்தில் நான் நன்றிக்கடன் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது நிலவும் சிக்கலான காலப்பகுதியில், உலகளவில் காணப்படும் பெரும் ஒத்துழைப்பு மிகவும் ஊக்கமளிக்கிறது. எவ்வாறாயினும், செய்யவேண்டிய மேலும் பல விடயங்கள் இருக்கின்றன.

தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையானது, விசேடமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு, மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

இது, 2030இல் அடைய எதிர்பார்த்திருக்கும் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்துவதற்குப் பாதகமாக அமைந்திருக்கின்றது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், இவ்வாறான நிலையற்ற தன்மையிலிருந்து மீள்வதற்காக, சர்வதேசப் பொறிமுறையொன்றின் ஊடாக அபிவிருத்திக்கான நிதி மற்றும் கடன் சலுகை உள்ளிட்ட மேலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அத்தியாவசியமாகியுள்ளது.

தொற்றுப்பரவல் காரணமாக, இலங்கை கடுமையான சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது. சோகமயமான உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக, எங்களுடைய பொருளாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நாட்டைப் பூட்டுவது மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு விதித்தல், சர்வதேச உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சி மற்றும் மிதமான உலக வளர்ச்சி என்பன, எமது பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

இலங்கையானது, அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டும் வழிமுறையாகக் காணப்படுவதும் நாட்டின் சனத்தொகையில் 14 சதவீதமானோர் தங்கியிருக்கும் தொழிற்றுறையுமான சுற்றுலாத் துறை, பெரிதளவில் சரிவடைந்துள்ளது.

சுற்றுலாத் தொழிற்றுறை மற்றும் ஏனைய பல துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகங்களுக்கு, வட்டி நிவாரணம் மற்றும் நிதி பெற்றுக்கொடுத்தல் போன்று, அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் மூலம் சலுகைகள் வழங்கப்பட்டன.

நாளாந்தம் வருமானம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு, நிதி உதவிகளும் உலருணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. நாடு மூடப்பட்ட காலப்பகுதிகளில் இவ்வாறான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால், அரச செலவானது அதிகரித்தது.

தொற்றுப் பரவலால் ஏற்பட்ட நேரடிப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக ஏற்பட்ட இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளானவை, எங்களுடைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இருந்த நிதியின் இருப்பைச் சீர்க்குலைய வைத்தன.

தொற்றுப்பரவலின் விளைவுகள், மனித குலத்துக்கு மிகவும் அழிவுகரமானவையாக அமைந்தன. இவற்றை விட மிக மோசமான விளைவுகளை, காலநிலைப் பிரச்சினைகள் ஏற்படுத்தக்கூடும். அதனால், எதிர்வரும் சில தசாப்தங்களுக்குள் இந்த உலகம், பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

இந்தப் பூமியின் ஆரோக்கியத்துக்கு, முன்னர் இல்லாதளவில் மேற்கொள்ளப்படும் மனிதச் செயற்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்று, காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றங்கள் மற்றும் பல்லுயிர்ப் பரம்பல் இல்லாமல் போவதால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்குத் தீர்வு காண்பதற்காக, தீர்க்கமானதும் உடனடியானதுமான பலதரப்பு நடவடிக்கையொன்றின் தேவை அவசியமாகியுள்ளது.

காலநிலை மாற்றங்களுக்கு இலக்காகும் ஒரு நாடாக, அதில் உள்ள அபாயங்கள் குறித்து இலங்கை நன்கு அறிந்திருக்கிறது.

இலங்கையின் தத்துவப் பாரம்பரியம் ஆழமாக வேரூன்றியுள்ள என்றும் சுற்றுச்சூழல் மதிப்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும், கௌதம புத்தர் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையானது, பொதுநலவாய அமைப்பின் நீல சாசனத்தின் பலமிக்க நாடாக விளங்குவதோடு, இதன் அடிப்படையிலேயே, சதுப்புநிலக் கலாசாரம் தொடர்பான செயற்பாட்டுக் குழுவுக்குத் தலைமைத்துவத்தையும் வழங்கி வருகின்றது.

2030ஆம் ஆண்டுக்குள், நைட்ரஜன் கழிவுகளின் அளவை அரைவாசியாகக் குறைக்க எதிர்பார்த்திருப்பதோடு, 'நிலையான நைட்ரஜன் முகாமைத்துவம் பற்றிய கொழும்பு சாசனத்தை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம், சுற்றுச்சூழல் மாசடைவைக் கட்டுப்படுத்தி, உலகளாவிய முயற்சிகளுக்கு, இலங்கையும் பங்களிப்பு நல்கியுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற முன்கூட்டிய மாநாட்டில், ஒன்லைன் ஊடாகக் கலந்துகொண்டதன் மூலம், இந்த மாதத்தின் பிற்பகுதியில் இடம்பெறும் ஐ.நா உணவு மாநாடானது, உலகளவில் ஆரோக்கியமானதும் நிலையான மற்றும் சமமான உணவு முறைகளை ஊக்குவித்தல் தொடர்பில் செயற்பாட்டு ரீதியிலான பிரதிபலன்களைப் பெற்றுத்தரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அவ்வாறான பிரதிபலன்கள், மனிதச் சுகாதாரத்தைப் போன்றே, இந்தப் பூமியின் சுகாதாரத்துக்கும் மிக முக்கியமாக அமையும்.

நிலைத்தன்மை என்பது, இலங்கையின் தேசியக் கொள்கைக் கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும். மண் வளம், பல்லுயிர், நீர்வழிகள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பில் எழுந்த பிரச்சினைகள் காரணமாக, என்னுடைய தலைமையிலான அரசாங்கம், இந்த ஆண்டின் ஆரம்பத்தில், இரசாயனப் பசளை, பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாட்டுக்குத் தடை விதித்தது.

சேதனப் பசளை உற்பத்தி மற்றும் அதனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாயத்துக்கான முதலீடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இலங்கைக்குள் நிலையான விவசாயத்தை உருவாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்காக, உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் பலவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஊக்கமளிப்புகளுக்கு, இவ்விடத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது தேசிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். அடுத்த சில தசாப்தங்களில், வனப் பகுதியை கணிசமானளவில் அதிகரிப்பதே எங்கள் குறிக்கோளாக இருக்கின்றது.

நாடு முழுவதிலும் காணப்படும் 100 ஆறுகளுக்கும் மேலானவற்றைச் சுத்தம் செய்து மீட்கவும் ஆறுகள் மற்றும் சமுத்திர மாசுபடுத்தலுக்கு எதிராக நிற்கவும், நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஆதரவாக, ஒருமுறை உபயோகிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கும் தடை விதித்துள்ளோம்.

படிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்து காபனேற்றத்தை ஆதரிப்பதற்கான அவசரத் தேவையை இலங்கை அடையாளம் கண்டுள்ளது.

எம்முடைய மின்சக்தி கொள்கையின் ஊடாக, 2030ஆம் ஆண்டுக்குள், எமது தேசிய மின்சாரத் தேவையின் 70 சதவீதத்தை, சூரியசக்தி, காற்றாலை மற்றும் நீர் போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களினூடாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

எமது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல் போதும், சர்வதேச சமூகத்தினரின் ஒத்துழைப்பை இலங்கை அன்புடன் வரவேற்கிறது.

முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வர்த்தகத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும், எமது நாட்டின் அமைவிடம் மற்றும் எங்களுடைய வலுவான நிறுவனங்கள், வலுவான சமூக உட்கட்டமைப்பு மற்றும் திறமையான பணியாளர்களை அதிகளவில் பயன்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம்.

இதற்கான வசதிகளை வழங்குவதோடு, எமது மக்கள் அனைவரையும் வளப்படுத்துவதற்கான நீதி, ஒழுங்கு, நிர்வாகம் மற்றும் கல்வி போன்ற துறைகளையும் விரிவுபடுத்தி, விரிவான சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள, எனது அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் இருந்தே, இலங்கையானது சர்வஜன வாக்குரிமையைப் பெற்றிருந்தது. ஜனநாயகக் கலாசாரம் என்பது, எமது வாழ்வியலில் மிக முக்கிய அங்கமாகக் காணப்படுகிறது.

வளமானதும் நிலையானதுமான நாடொன்று உருவாக்கப்படுவதற்காகவும் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்காகவும், 2019ஆம் ஆண்டில் என்னை இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கவும் 2020இல் இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் ஊடாகப் புதிய அரசாங்கமொன்றை உருவாக்கவும், மாபெரும் மக்கள் ஆணையை இலங்கை மக்கள் வழங்கியுள்ளனர்.

2019ஆம் ஆண்டில், அடிப்படைவாத மத வாதத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களையும் இலங்கை எதிர்கொண்டது.

அதற்கு முன்னர், அதாவது 2009ஆம் ஆண்டு வரையில், சுமார் 30 வருடங்களாக இலங்கையில் யுத்தம் நிலவியது.

பயங்கரவாதம் என்பது, உலகளாவிய அச்சுறுத்தல் என்பதோடு, அதனை வெற்றிகொள்ள வேண்டுமாயின், விசேடமாகப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு, சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகின்றது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில், இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர்களும் பல தசாப்தங்களுக்குரிய செழிப்பும் இழக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வன்முறைச் செயல்கள் இலங்கையில் மீண்டும் நடக்காது என்பதை உறுதிசெய்வதில் எனது அரசு உறுதியாக உள்ளது. அதனால், அவற்றின் பின்னால் காணப்படும்

☞12

## உள்நாட்டு ...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள, தேசிய நிறுவனங்களினூடான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பொருளாதார அபிவிருத்தியின் பிரதிபலன்களுக்காக, நியாயமான பங்கேற்பை உறுதிசெய்வதிலும் உண்மையாக இருக்க வேண்டும்.

இனப் பாகுபாடு, மதம் மற்றும் பாலின வேறுபாடுகளின்றி, அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதும் நிலையானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதே, என்னுடைய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்தச் செயற்பாட்டுக்காக, அனைத்து உள்ளூர் பங்குதாரர்களுடன் இணைந்து, சர்வதேசப் பங்குதாரர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயார்.

எவ்வாறெனினும், மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் மட்டுமே நிலையான முடிவுகளைப் பெறமுடியுமென்பதை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. இலங்கையின் நாடாளுமன்றம், நீதித்துறை மற்றும் சுயாதீன சட்டரீதியான அமைப்புகள், தங்கள் செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வரம்பற்ற இடத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இன்று நமது பொதுச் சபை விவாதத்தின் கருப்பொருளுக்கு ஏற்ப எங்கள் நம்பிக்கையின் மூலம் உண்மையான நெகிழ்ச்சியை உருவாக்க வேண்டுமாயின், நாங்கள் அனைவரும், பொது நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

இறையாண்மையுடன் கூடிய அனைத்து அரசாங்கங்களினது அளவையும் வலிமையையும் பொருட்படுத்தாமல், நியாயமான முறையில் கருதி, அவர்களின் வழிமுறைகள் மற்றும் பாரம்பரியத்துக்கு உரிய மரியாதையுடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது, ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பாக இருக்கின்றது.

ஆப்கானிஸ்தானில் பௌத்த உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிக்குமாறு, ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேசத்திடமும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மனித குலத்துக்கும் சிறந்ததும் நிலையானதுமான எதிர் காலத்தை உருவாக்குவதற்காக, உண்மையான ஒத்துழைப்புடனும் தியாக மனப்பான்மையுடனும், நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர மரியாதையுடன் ஒன்றாகப் பணியாற்றுவோம் என்று, இந்த மாபெரும் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளிடம் நான் கேட்டுக்கொள்கிறேன் – என்றார்.

---

## நற்சான்றுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராம்நாத் கோவிந்திடம் தனது நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலைக் கருத்தில்கொண்டு, இந்திய வெளிவிவகார அமைச்சால் உரிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி காணொலி வடிவில் ஒளிபரப்பு செய்யக் கூடிய விதமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி இந்திய ஜனாதிபதி அவரது உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனிலிருந்து வெளிவிவகார அமைச்சுடன் இணைந்துகொண்டதையடுத்து, அவரிடம் மிலிந்த மொறகொட நற்சான்றுப்பத்திரத்தைக் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பில் இந்திய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர் மிலிந்த மொறகொட, இந்தியத் தூதுக்குழு செயற்திட்டத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## மன்னார் ஆயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவரித்து, அவை தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணை நடாத்துமாறு கர்தினால் மல்கம் ரஞ் சித்திடம் இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கர்த்தினால் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆகிய தரப்புகளுக்குத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை அவர் முன் வைத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் ஆயர் இல்லம் மேற்கொண்ட 37 அராஜகங்களை எம்மால் சாட்சிகள், காணொலிகள் போன்ற சான்றுகளுடன் நிரூபிக்க முடியும் என்பதனால் இதற்கு ஓர் விசாரணைக் குழுவை அமைத்து உடன் விசாரணை நடத்த வேண்டும்.

அவ்வாறு நீங்கள் விசாரணை நடத்தத் தவறினால் நாம் இலங்கை அரசிடம் இந்தக் கோரிக்கையை முன் வைப்போம்.

மனித உரிமையை மீறினர், அரசமைப்பு வழங்கிய உரிமைகளை மீறினர், அரசின் காணிகளையும் சைவர்களின் காணிகளையும் வன்முறையின் மூலம் ஆக்கிரமிக்கின்றனர், அறத்தை மீறி சைவர்களை மதம் மாற்றி கிறிஸ்தவராக்குகின்றனர் மற்றும் இவைபோன்ற ஏனைய விடயங்களிற்கும் நீங்கள் அமைக்கும் ஆணைக்குழு முன் தோன்றி சாட்சிகள், ஆவணங்களை வழங்கத் தயாராகவுள்ளேன். இந்த விடயத்தில் நீங்களோ அல்லது வத்திக்கானோ நடவடிக்கை எடுக்காது விட்டால் நாம் இலங்கை அரசைக் கோருவோம்.

இலங்கை அரசும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாது விடின் உங்கள் வழியில் நாமும் ஐக்கிய நாடுகள் சபையை நாடுவோம். – எனத் தமது கடிதத்தில் எனவும் குறிப்பிட்டுள்ளார் மறவன்புலவு சச்சிதானந்தம்.

சம்பவங்கள் இடம் பெற்றன எனக் கூறப்படும் 37 இடங்கள் தொடர்பிலும் அவற்றைப் பட்டியலிட்டு அங்கே புரியப்பட்டதான அட்டூழியங்கள் என்ற விவரமான பட்டியலும் இணைக்கப்பட்டு 28 பக்க அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## கூட்டமைப்புடன் பேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான உரை குறித்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

2009 மே 26 ஆம் திகதி பான் கி – மூன் இலங்கை வந்திருந்தபோது அவருடன் மஹிந்த ராஜபக்ஷ இணைந்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதே போன்றே தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் கூறுகின்றார். இவர் இப்படி கூறுகையில், நாங்கள் வெளியகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார். இது இரண்டுவிதமான பேச்சு .

இந்நிலையில், புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளமையை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இந்த வருடம் ஜூலை மாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இறுதி நேரத்தில் அது நடத்தப்படவில்லை. நாங்கள் இரண்டு மாதங்களாக அதற்காகக் காத்திருக்கின்றோம்.

ஆனால், இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச மறுக்கும் ஜனாதிபதி, நியூயோர்க்கில் இருந்துகொண்டு புலம்பெயர் தமிழர்களைப் பேச அழைப்பது வேடிக்கையானது. அவர் கட்டாயம் எங்களுடன் பேச வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கின்றார்கள் – என்றார்.

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நியூயோர்க் நகரில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்..

ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளைக் கண்டறியுமாறும், அரசியல் எதிரிகளை அடக்குவதை உடனடியாக நிறுத்துமாறும் ஆர்ப்பாட்டகார்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


---

## நாகர் கோவில் மகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுப் பிற்பகல் தமிழ்த் தேசியக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்





செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் ஈகைச் சுடரேற்றி அகவணக்கம், மலர்வணக்கம் செலுத்தியும் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்தார்.

1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி நண்பகல் 12.30 மணியளவில் நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் தமது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் விமானப் படையின் புக்காரா விமானம் நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சில் 21 மாணவர்கள் பலியாகினர். பலர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

விமானத்தின் சத்தத்தைக் கேட்ட மாணவர்கள் பயத்தால் ஒரு மரத்தின் கீழ் நின்றவேளை மரத்தின் மீது விழுந்த குண்டால் அந்த இடத்திலேயே 21 மாணவர்கள் உடல் சிதறிப் பலியானார்கள். இந்தக் கொடூர தாக்குதலில் 18 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

---

## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயதான நபர் பீடி புகைப்பதற்கு அங்கவீனமுற்ற பிள்ளையிடம் தீ மூட்டுமாறு கூறியுள்ளார். பீடியை பற்றவைத்த பின்னர் தீக்குச்சியை வீசிய பொழுதே குடிசையில் தீப்பற்றி எரிந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நேற்று முற்பகல் புத்தளம் நீதிவான் அசேல சில்வா அந்த இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

உயிரிழந்த நபர் 97 வயதுடைய 12 பிள்ளைகளின் தந்தையென பொலிஸார் தெரிவித்தனர். சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை யின் பின்னரே அது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சுமந்திரன், அங்கஜனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கஜன் ஆகியோரின் ஆசீர்வாதத்தோடு வல்வெட்டித்துறையில் தமிழ்த் தேசியம் அடித்து வீழ்த்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தேர்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று நடைபெற்ற வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தேர்தலில் தமிழ்த் தேசியத்தை சீர்குலைக்கக் கூடிய விடயங்கள் நடைபெற்று சுயேச்சைக் குழுவின் தலைவரான செல்வேந்திரா தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## புலம்பெயர் அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நடைபெற்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் பேசுகையில்,

கடந்த 19 ஆம் திகதி நியூயோர்க் நகரில், ஐ.நா. பொதுச்செயலாளரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்த போது, உள்ளகப் பொறிமுறையில் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த சிறிது காலத்தில், பல எண்ணிக்கையிலான புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தது. இவ்வாறாக தடை செய்துவிட்டு ஐ.நா.வுக்கு செல்லும்போது இவ்வாறு கூறுகின்றனர். இது முழுமையான வெற்றுப் பேச்சே.

இதேவேளை, காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழை வழங்குவதற்காக நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி கூறுகின்றார். அப்படியானால் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

அதேபோன்று ஆட்சிக்கு வந்த பின்னர் பல தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ததாக ஜனாதிபதி கூறியுள்ளார். தண்டனைக் காலம் முடிவடையவுள்ளவர்களே அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இவ்வாறான அறிவித்தல்கள் சர்வதேசத்துக்கு ஜனாதிபதி வழங்கும் வெற்றுப் பேச்சுகளாகவே இருக்கும் – என்றார்.

---

## 92 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்தஎண்ணிக்கை 12 ஆயிரத்து 376 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 92 பேரில் 41 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 4 நாள்களாக 100 இற்கும் குறைவான கொரோனா சாவு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

அதன்படி, குறித்த 4 நாள்களில் கடந்த 20ஆம் திகதி 84 கொரோனா சாவுகள் பதிவானது.

மற்றைய மூன்று நாள்களில் 93, 66, 92 என்றவாறு கொரோனா சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டன.

---

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 8 ஆயிரத்து 651 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 882 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 35 ஆயிரத்து 22 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.